விலை சதம் 10

Registered at the G. P. O as a Newspaper

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

தபால் பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 18 ஆம் நாள் துல்ஹஜ் 15 (31-5-61) புதன்கிழமை இதழ் 91

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# நேருவுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

## துர்க்காபூர் சம்பவத்தின் எதிரொலி?

### இரவு, பகல் காவல் புரிய உத்தரவு



புதுடில்லி, மே 30

இந்திய பிரதம மந்திரி நேருவுக்கு பலத்த போலிஸ் பாதுகாவல் போடப்பட்டிருக்கிறது. இரவு பகலாக அவரைக் காவல்புரியுமாறு இரகசியப் போலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டியை துர்க்காபூரில் ஒருவன் உருவிய கத்தியுடன் குத்த முயன்றதும், "அடுத்த முயற்சி நேருவுக்கு" என அவன் போலிஸாரிடம் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

திரு. நேரு இன்று துர்க்காபூரிலிருந்து புதுடில்லி திரும்பினர்.

## சிங்கள ஆசிரியர் இல்லை

மட்டக்களப்பு, செவ்வாய்

கடந்த மூன்று மாதங்களாக மட்டக்களப்பு வின்ஸன்ட் பெண்கள் உயர்தரப்பாடசாலையில் உள்ள சிங்களப் பிரிவு, படிப்பிப்பதற்கான ஒரு சிங்கள ஆசிரியர் இல்லாமல் இருந்து வருகிறது.

சுமார் 40 மாணவிகள் இச் சிங்கள வகுப்பில் இருக்கின்றனர் எனத் தெரிகிறது. சென்ற மூன்று மாத காலத்திற்கு முன்னர் இங்கு படிப்பித்த ஒரு ஆசிரியர் மாற்றலாகிச் சென்றதைத் தொடர்ந்து வேறு ஆசிரியர் நியமிக்கப்படாததே இந்தக் காலியான இடத்திற்குக் காரணமாகும் எனத் தெரிகிறது.

## மேலும் 5 தொழிற் கோர்ட்டுகள் சீக்கிரம் நிறுவப்படும்

### பெருகிவரும் தகராறுகளே காரணம்

கொழும்பு, செவ்வாய்

தொழில் தகராறுகளைத் துரிதமாகத் தீர்க்கும்பொருட்டு 5 தொழிற் கோர்ட்டுகள் சீக்கிரம் நிறுவப்படவிருக்கின்றன. இவை நிறுவப்பட்டவுடன் நாட்டில் மொத்தம் 8 தொழிற் கோர்ட்டுகள் செயல்படும்.

இப்போது 2500 தொழில் தகராறுகள் இன்னும் தீர்க்கப்படாமல் தொழிற் கோர்ட்டுகளில் இருப்பதாகத் தெரிகிறது. மாதம் சுமார் 475 தொழில் தகராறுகள் வருவதாயும், இவற்றில் சுமார் 110 மட்டுமே தொழிற் கோர்ட்டுகள்மூலம் தீர்க்கப்படுவதாயும் கூறப்படுகிறது. குறைந்தது ஒரு வழக்கைத் தீர்க்க 9 மாதங்கள் பிடிக்கின்றன.

## மலாயா பல்கலைக்கழகத்தில் வண. தனிநாயகம் அடிகளுக்கு பதவி

### இலங்கை சர்வகலாசாலையில் பதவியை ராஜினமாச் செய்தார்

கொழும்பு, செவ்வாய்

பிரபல கல்விமானன அதி. வண. தனிநாயகம் அடிகளார் மலாயா சர்வகலாசாலையில் இந்தியக் கல்விப் பகுதியின் தலைவராகப் பதவி ஏற்கும் பொருட்டு, இலங்கை சர்வகலாசாலையிலுள்ள தன் பதவியைச் சமீபத்தில் ராஜினமாச் செய்திருக்கிறார். கடந்த 8 வருடங்களுக்கு மேலாக, அவர் இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினர். வண. தனிநாயகம் அடிகள், ஏற்கனவே தம் புதிய பதவியை ஏற்றுக்கொண்டுவிட்டாரென்றும், இப்போது மலாய் மொழியைக் கற்றுவருவதாயும் மலாயாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இலங்கையில் அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்றிருந்தார். மதகுரு ஆவதற்காக லத்தீன், ஹிப்ரு ஆகிய மொழிகளையும் அவர் கற்றிருந்தார். ரோம் நகரில் இத்தாலிய மொழியையும், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், ரஷ்ய மொழிகளைச் சுலமாகவும் அவர் கற்றவர்.

நீண்டகாலத்துக்குமுன் தென்னிந்தியாவுக்கும், மலாயாவுக்குமிடையே நடைபெற்ற வர்த்தகத் தொடர்பின்காரணமாக கடல் வர்த்தகத் துறையில் இருநாட்டு மொழிகளிலும் பல வார்த்தைகளில் ஒருமைப்பாடு காணப்படுகிறது எனத் தனிநாயகம் அடிகளார் மலாயாவில் ஒரு பேட்டியின்போது கூறினர்.

## கைத்தொழில் கட்டுப்பாடு மசோதா தயாராய் உள்ளது

### சீக்கிரம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

கைத்தொழில் கட்டுப்பாடு சம்பந்தமான சட்ட மசோதா இப்போது தயாராய் உள்ளதாயும், கூடியவிரைவில் அது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. கைத்தொழில்களில் அனாவசியமான போட்டிக்கெதிராய் இம்மசோதா பாதுகாப்பளிக்கும். இந்திய கைத்தொழில் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ரீதியில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது.

—

## ஓய்வுபெறும்திட்டத்தில் புதிய திருத்தம்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம், சென்ற வாரம் தயாரித்த அரசாங்க ஊழியர் ஓய்வு பெறும் திட்டம் சம்பந்தமாக மீண்டும் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது.

உத்தியோகத்தை இழப்பவரின் நஷ்டஈடு பற்றி அத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்று பிரதம மந்திரிக்கு அரசாங்க சேவை யூனியன்கள் செய்துகொண்ட புகார் காரணமாகவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நீதிமந்திரி திரு. ஸாம். பி. ஸி. பெர்னண்டோ இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்த அரசாங்க சேவை யூனியன்களின் பிரதிநிதிகளை வரும் வெள்ளிக்கிழமை சந்திப்பார்.

## "அரசாங்க ஊழியர் கடமை"

மாத்தறை, திங்கள்

அரசாங்க ஊழியர்கள் தங்களுக்கென தனிப்பட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டிருப்பதற்குப் பூரண சுதந்திரமிருக்கிறதென்ருலும் அரசாங்க ஊழியர்கள் என்ற முறையில் பதவியிலுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று உள்நாட்டு, கலாசார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா மாத்தறை ராகுல கல்லூரியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

மக்களுக்குத் தேவையான பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை என்று திரு. மைத்திரிபால கூறினர். சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நாளன்றுதான் இலங்கை உண்மையான சுதந்திரம் பெற்ற நாளாகும் என்று மந்திரி கூறினர்.

மாத்தறையில் ஒரு நெசவு ஆலை நிறுவப்படவிருப்பதாகவும், எட்டியாந்தோட்டையில் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டால் வருடத்துக்கு 20 இலட்சம் ஓடுகள் உற்பத்தி செய்ய முடியுமென்றும் மந்திரி தெரிவித்தார்.

## 'அதிக பழமரங்கள் நாட்டுக'

### ஆசிரியர்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

அதிக பழமரங்களைப் பாடசாலைத் தோட்டங்களில் நாட்டுமாறு கல்வி ஆணையாளர் திரு. எஸ். எவ். டி' சில்வா ஆசிரியர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் நல்ல தோட்டங்களை உண்டாக்கவேண்டும் என கல்வி இலாகாவால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் தனிப்பட்ட ஒவ்வொரு ஆசிரியரையும் இவ்விஷயத்தில் சிரத்தை காட்டும்படி கேட்டுள்ளது.

தமது சேவைக் காலத்தில் ஒரு மாமரத்தையாவது நட்டு வளர்க்கவேண்டுமென ஒவ்வொரு ஆசிரியருக்கும் கல்வி இலாகா அறிவித்துள்ளது.

தோட்ட வேலைகளைப் பொறுத்தவரை உதவி தேவைப்படும்பொழுது ஆசிரியர்களுக்கு உதவுமாறு விவசாய இலாகா அதிகாரிகளை கல்வி இலாகா கேட்டுள்ளது.

—

## பாகிஸ்தானுக்கு நேரடி தந்திசேவை

கொழும்பு, செவ்வாய்

வருகிற ஜூன் மாதம் முதல் தேதிமுதல் பாகிஸ்தானுக்கு நேரடியாக தந்திப்போக்குவரத்து நடைபெறுமென்றும், இதுவரை இந்தியா மூலம் பாகிஸ்தானுக்கு நடைபெற்று வந்த தந்திச்சேவை நிறுத்தப்பட்டு கட்டண விகிதத்திலும் மாறுதல்செய்யப்படுமென்றும் தபால் அதிகாரியின் அறிக்கை தெரிவிக்கிறது.

## பதவியிலிருந்து விலகும் தயாளுக்கு பாராட்டு

### "அவரது யோசனையை இன்னும் எதிர்பார்க்கிறேன்"

—ஐ. நா. பொதுக்காரியதரிசி.

நியூயோர்க் மே 30

காங்கோவில் பார்லிமென்ட் அங்கத்தினர்கள் நிர்ப்பந்தமின்றி கூட்டத்தை நடத்துவதற்கான ஒரு திட்டத்தை அங்கு, ஐ. நா. விசேஷ பிரதிநிதியாக இருந்த திரு. ராஜேஸ்வர தயாள் சமர்ப்பித்துள்ளார். ஐ. நா. பதவியிலிருந்து விலகி மீண்டும் பாகிஸ்தானில் இந்திய ஹைகமிஷனராகச் செல்லும் அவரது பணியைப் பாராட்டிப் பலர் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு. செஸ்டர் பௌல்ஸ், காங்கோவில் தயாள் ஐ. நா. விசேஷ பிரதிநிதியாகத் திறமையாகக் கடமையாற்றியதாய் பாராட்டியிருக்கிருர்.

ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட், காங்கோ பற்றி திரு. தயாளின் யோசனை எதிர்காலத்திலும் தமக்கு சிற்சில சமயங்களில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாய்க் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


# லட்சாதிபதியாகும் அதிர்ஷ்டசாலி யார்?

## காலி ஜிம்கானு சீட்டிழுப்பின் முடிவுகள்

காலி, திங்கள்

காலி ஜிம்கானு கிளப் நடத்தும் அதிர்ஷ்ட லாபச்சீட்டு இங்கு இன்று இழுக்கப்பட்டது. புதன்கிழமை டேர்பியில் நடைபெறவிருக்கும் குதிரைப் பந்தயத்தை யொட்டி நடைபெற்ற இச்சீட்டிழுப்பில் குதிரைகளின் பெயர்களும் அக்குதிரைகளின் பெயர்களை இழுத்துள்ள அதிர்ஷ்டசாலிகளின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை டேர்பியில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தில் முதலாவதாக வரும் குதிரையின் பெயரை இழுத்துள்ளவருக்கு முதல் பரிசாக ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 17 ரூபாய் 48 சதம் கிடைக்கும். இரண்டாவதாக வரும் குதிரையின் பெயரை இழுத்துள்ளவருக்கு இரண்டாவது பரிசுத் தொகையாக 39 ஆயிரத்து 242 ரூபாய் 72 சதமும் மூன்ருவதாக வரும் குதிரையின் பெயரை இழுத்துள்ளவருக்கு மூன்ருவது பரிசுத் தொகையான 14 ஆயிரத்து 716 ரூபாய் 02 சதமும் கிடைக்கும்.

இதர குதிரைகளின் பெயர்களை இழுத்துள்ளவர்களுக்கு தலா 928 ரூபாய் 03 சதம் கிடைக்கும்.

**அலிஒஷா:** ஜி. எம் டி. பண்டா, 197, ஜம்பட்டாதெரு, கொழும்பு-12. **அவுறேலியஸ்:** சோமபால வியனகே, 186,மகாமோதர, காலி. **அலேவின்:** பச்சைமுத்து சுப்பையா, 241/33, முகத்து வார வீதி, கொழும்பு-15. **ஜஸ்ட்கிறேற்:** எஸ். ஏ. ஏ. கருணரத்தின, கல்வி இலாகா, கொழும்பு-2. **லற்றின் லவ்வர்:** சி. சிவகுரு சிவஞானசுந்தரம், 168, கோவில் வீதி, நல்லூர். **மோரியர்ஸ்:** எச். எம். ஜயவர்த்தன, வெலிகெபல, பலாங்கொடை. **நீன்டேதல்:** எம். எல். எம். சிரூஸ், மீரிகாவத்தை. **ஹெட்பிறண்டி:** ஆர். சைமன், 10/3, கொலிஜ் வீதி, சிலாபம். **ஜொலி ஜோக்கர்:** எம்.நல்லையா, பொலிஸ் நிலையம், தங்காலை. **டிக்ரு டிறேஜ்:** பி. ருமையா, பி. டப்ளியூ. டி., டிக்கோயோ. **டோல்:** கே. எம். கருணரத்ன, 20, கோத்தாமி வீதி, கொழும்பு-8. **வோன்ராணடிறிவி:** கே. ஜி. ஆப்பிரகாம் ஹாமி, பல பெயன்கவல, கடவத்தை **கோலின்ற் நைற்:** எஸ். எதிரிசிங்கி, கிராம விதானை, தெபத்கம, அருநாயக்கா. **பல்முசெற்றி:** எச். ஜி. விமலஜீவ, 227/5, ஹை ஸ்டிரீட், வெள்ளவத்தை. **வெலிகுயிக்ஸ்:** பி. ஜே பெர்னந்து, 31/1 புளுமெண்டால் ஒழுங்கை, கொழும்பு-13. **பவுண்ரியஸ்:** எம். ஏ. கே. விக்கிரமசிங்கி, மடவெல, தெய்யாந்தர.

**கப்றியாணி:** எச். எச். ஏ. உஜினஹாமி, வெலிகெதர, கொனவில. **நிகோமிடஸ்:** திருமதி பி. பரமலிங்கம், கரவெட்டி கிழக்கு. **ஒக்வில்லி:** பேர்னட் எதிரிசிங்கி, சோமசெற் தோட்டம், உடுகெற்றனி. **வென்டேவிஸ்:** திருமதி பியற்றிஸ் பிஷம்போ, லென் அல்பின், பதுளை. **பொலோ 11:** திருமதி கே. வி. ஈ ஜயசுந்தரா, பலிகாம, அட்டபாகே. **பார்தோயு.** எல். எம். றசீட், தளித்ஸ்ரோஸ், மாவனல்லை. **பற்றிக்சொய்ஸ்:** பி. முனிசாமி, எடின் பெரோ மார்க்கட், கொழும்பு. **பேர்வெக்ற் நைற்:** என். ரி. டி. வசி, 97, ஜம்பட்டா தெரு, கொழும்பு-13. **பின்ருறிஸ்சையோ:** எஸ். றெஜினல், அதுறுபன வலோவி, கேகல்லை. **பின்சன்:** எம் வை. எம். தஹா, 197, பிரதான வீதி, கொழும்பு. **பிங்கெப்:** வி. பிரான்சிஸ், 41, தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிதாவத்தை, கொழும்பு. **லோர்மெல்:** பி. ஆர். நொயிஹாமி, பருகொடை, கொறடினியாயா. **பொலிச்ரர்:** ஆர். பி. சிறிவர்த்தன, ஸ்ரீ லங்கா கொமேர்ஷல் கல்லூரி, கந்தானை. **பிறின்ஸ்ருடோர்:** எஸ். ஏ. சுவர்ணதிசா, 140/18, ஸ்ரீ சங்கயாகா மாவத்தை, மருதானை. **ஸிடிய[illegible]:** கே. ஏ. எட்வின் பீற்றர், பஹல, இம்புள்கொடை. **றேயன் வேட்:** ஜே. ஜே. டி. மூரி 'அமரவாசா', கல்பிட்டியா. **ருளோ - ஜிலா:** ஆர். ஜயசிங்கி, 112/10,குமாரன் ரத்தினம் வீதி, கொழும்பு - 2. **ஸ்கற்றர்:** கியூ. எம். தபாரி, கல்ரெக்ஸ், கொலனவ, வெல்லம்பிட்டியா. **சோருங்கோ:** ஏ. சி. எம். ரூவ், 32, கண்டி வீதி, கம்பளை. **சுப்றீம் வேர்டிக்:** ஆர்தர் ருமநாயகா, அளுத்கெதர, தெனிபிற்றியா. **ரைம் கிறீன்:** பி. சொறதா தேரோ, வனமுல்லை, 136, கழனி. **[illegible]றஸ் சோப்:** ஜி. ஆரியதாசா [illegible] டி. சில்வா, கொறககெல்ல மில்ஸ், படல்[illegible]ம. **தேர்பிகோ:** ஆர். டி. லிசா, 303,அதுமெலியா, தொம்பகஹவெல. **பீல்ட்:** எச். ஏ. மேரிநோன, 18, பட்டினசபை வீடமைப்புத்திட்டம், கேகல்லை.

பின்வருபவர்களுக்கு ரூ. 1000

(6-ம் பக்கம் பார்க்க)

## வியன்னு சந்திப்பு

### இரு தலைவர்களின் நம்பிக்கை

பிராக், மே 30

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் சோவியத் பிரதமர் குருசேவும் சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் வியன்னவில் சந்தித்துப் பேசவிருப்பதை இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்னேவும் செக்கோஸ்லேவாக்கிய பிரதமரும் வரவேற்றுள்ளனர்.

செக்கோஸ்லேவாக்கியாவுக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்திய டாக்டர் சுகர்னேவும் செக்கோஸ்லேவாக்கிய பிரதமரும் தங்கள் பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஒரு கூட்டறிக்கையை விடுத்தனர். அந்த அறிக்கையில் சோவியத் அமெரிக்கத் தலைவர்கள் சந்தித்துப் பேசுவதன்மூலம் உலக நெருக்கடி குறையலாமென்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.


## ஸபாஸ் ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ்

எமது ஸ்ருடியோ நெக்கெற்றிவ்ஸ் இலக்கம் 1 முதல் 15000 வரை இனிமேல் வைத்துப் பாதுகாக்கப்படமாட்டாது. அதற்கு உரியவர்கள் விரும்பினல் 10-6-61க்குமுன் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஸபாஸ் 11.** ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## புதிய பஸ் சேவை வேண்டும்

காவலப்பிட்டி, செவ்வாய்

கந்தலோயா சீபோத் கொலனிக்கு புதிய பஸ் சேவையொன்றை நாவலப்பிட்டியிலிருந்து ஏற்பாடுசெய்து தரும்படி நாவலப்பிட்டி சமசமாஜ வாலிபர் சங்கம் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொலவிடம் மகஜரொன்று சமர்ப்பித்திருக்கிறது. அம்மகஜரில் மூன்று வருடங்களுக்கு முன்னரே கேட்கப்பட்டு வரும் இக்கோரிக்கை கவனிக்கப்படவில்லையென்றும், சபாநாயகர் தலையிட்டு ஏற்ற ஒழுங்குகள் செய்து தரும்படியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல்மூலம் நிரூபிக்கப்பட்டமருந்து **"யோகீஸ்வர ரசம்".** தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு — வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து **"பெரும்பாடு நிவாரணி".** தாமதமின்றி கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா** "புற்றுநோய் நிபுணர்", ஆயுள் வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, **றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


## ஊரெழுவில் மேலும் இருவர் கைது

### சாக்கில் பிரேதம் கிடந்ததன் எதிரொலி

யாழ்ப்பாணம், புதன்

ஊரெழுவைச் சேர்ந்த மாரிமுத்து மார்க்கண்டு என்ற மணமான 28 வயது இளைஞனின் கொலை சம்பந்தமாக மேலும் இருவரைப் பொலிசார் சந்தேகத்தின்மீது கைது செய்து காவலில் வைத்திருப்பதோடு ஓர் மோட்டார் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி பழைய டச் வீதிக்கு அருகிலுள்ள புதருக்குள் கிடந்த ஒரு சாக்கினுள் அழுகிய நிலையில் காணப்பட்ட ஒரு பிரேதத்தைப் பொலிசார் கண்டெடுத்ததாயும் இது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது மாடசாமி என்பவர் கைதுசெய்யப்பட்டதும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்பொழுது இதுசம்பந்தமாக ஊரெழுவைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர் எஸ். செல்லையாவும் அதே ஊரைச் சேர்ந்த திரு. எம். முத்துக்குமாரசாமி என்பவரும் மாவட்ட உதவிநீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். நீதிபதி இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஊரெழுவைச் சேர்ந்த கந்தையாவுக்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றில் இரத்தக்கறை காணப்பட்டதினல் சந்தேகத்தின்மீது அதனையும் பொலிசார் கைப்பற்றித் தமது பாதுகாப்பில் வைத்திருக்கின்றனர். பொலிஸார் மேலும் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## பாடசாலைக் கூரை இடிந்து விழுந்தது

### 13 பேர் காயம்

கொழும்பு, செவ்வாய்

கனகமுவ அரசினர் கலவன் பாடசாலையின் கூரை இடிந்து விழுந்ததினல் திரு. ஆர். கே. பிரேமசிங்க என்ற ஆசிரியரும் நான்கு மாணவிகளும் ஒன்பது மாணவர்களும் காயமடைந்தனர்.

வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே கூரை இடிந்து விழுந்தது. காயமடைந்தவர்கள் மாத்தளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இப்பாடசாலை இரண்டரை வருடங்களுக்கு முன்னர் பெற்ருர் ஆசிரிய சங்கத்தினல் கட்டப்பட்டது.

## அல்ஜீரிய புரட்சித் தலைவர்கள்

### விசாரணை ஆரம்பம்

பாரிஸ், மே 30

அல்ஜீரியாவில் சமீபத்தில் தோல்வியில் முடிவடைந்த புரட்சிக்குத் தலைமைவகித்ததாகக் கருதப்படும் நான்கு மாஜி இராணுவ ஜெனரல்களில் இரண்டு ஜெனரல்கள் மீது நேற்று பாரிசில் விசாரணை ஆரம்பமானது.

ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட இராணுவ உயர் நீதிமன்றத்தில் இவ்விசாரணை நடைபெறுகிறது. நேற்றைய விசாரணையின் போது ஜெனரல் சாலே நீண்டதொரு வாக்குமூலமளித்தார். மற்றொருவரான ஜெனரல் செல்லர் பல தடவைகள் மூர்ச்சையாகி விழுந்ததால் விசாரணை பல தடவைகளில் தடைப்பட்டது.

## இராணுவச் சட்டம் தளர்வு

### அலபாமா கவர்னர் நடவடிக்கை

மொண்ட்கோமரி, மே 30

நிறவெறிக் கலகம் நடைபெற்ற அமெரிக்காவின் அலபாமா ராஜ்யத்தின் தலைநகரான மொண்ட்கோமரியில் விதிக்கப்பட்டிருந்த இராணுவச் சட்டத்தை அலபாமா கவர்னர் இன்று தளர்த்தினர். நகரில் காவல்புரிந்துவந்த 100 அமெரிக்க சமஷ்டிபொலிசாரும் வாபஸ் பெறப்பட்டனர்.

## ஹஜ்ஜுப் பெருநாள்

முள்ளியவளை, செவ்வாய்

முல்லைத்தீவு, தண்ணீரூற்று ஆகிய இடங்களிலுள்ள முஸ்லிம்கள், ஹஜ்ஜுப்பெருநாளை விமரிசையாகக் கொண்டாடினர். முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பள்ளிவாசல்களில் விசேட தொழுகையும் நடைபெற்றது.


## யாழ். வண்ணை — நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில்

### உயர்தர வகுப்புகள்

3-6-61 தொடக்கம் டி வித்தியாசாலையில் யாழ்/ஆரிய திராவிட பஷாபிவிருத்திச் சங்கத்தாரால் நடாத்தப்படும் பண்டித, பாலபண்டித, பிரவேச பரீட்சை வகுப்புக்கள் ஆரம்பமாகும் இவ்வகுப்புக்களில் சேர விரும்புவோர் தலைமையாசிரியருக்கு விண்ணப்பித்துச் சேர்ந்து கொள்ளலாம்.

விண்ணப்பத்தில், முழுப்பெயர்—பிறந்த திகதி—விலாசம்—சித்தியடைந்த இறுதிப் பரீட்சை—சேரக் கருதும் வகுப்பு—பெற்ருர் அல்லது பாதுகாவலர் என்ற விபரங்களுடன் எழுதுக. விண்ணப்பிப்போருக்கு **விதிமுறை விதிகள்** அனுப்பப்படும்.

வித்துவான் இ. திருநாவுக்கரசு
தலைமையாசிரியர்.

நாவலர் பாடசாலை,
யாழ்ப்பாணம். 29-5-61

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## யாழ்ப்பாணக் கல்லூரி

### பட்டதாரி மாணவர் பகுதி வட்டுக்கோட்டை

பயிற்சிக்காலம் **1961 — 1962**

1. இலங்கைப் பல்கலைக்கழக வெளிமாணவர் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதற்கான கலைப்பிரிவு (Arts)பட்டதாரிப் பொது வகுப்பொன்று ஜூன் மாதம் 15-ந் திகதி ஆரம்பிக்கப்பெறும்.

**போதனமொழி: தமிழ்**

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 9-6-61.

2. லண்டன் பல்கலைக் கழகம் நடாத்தும் பின்வரும் பரீட்சைகளிற் சேர்ந்து பயில்வதற்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பி. ஏ., பி. எஸ். ஸி. முதற்பிரிவு
பி. எஸ். ஸி. பொருளாதாரம் முதற்புரிவு

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16-6-61.

விண்ணப்பப் பத்திரங்களும் கல்லூரி விபர இதழும் கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுகாரர்

# ஜெனிவா மகாநாடு - முட்டுக்கட்டையை நீக்க முயற்சி

## மக்டனல்ட் புஷ்கின் மூன்றுமணிநேரம் சந்திப்பு

ஜெனிவா, மே 30

லாவோஸ் சம்பந்தமான பதினன்கு நாடுகளைக்கொண்ட சர்வதேசக்கமிஷன் நான்கு நாள் ஓய்வுக்குப்பின் நேற்று மீண்டும் கூடுவதாக இருந்ததெனினும் மகாநாட்டின் கூட்டுத் துணைத் தலைவர்களுக்குள் மகாநாட்டு நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக ஏற்பட்ட அபிப்பிராயபேதங்காரணமாக மகாநாடு நேற்று நடைபெறவில்லை. ஜெனிவாமகாநாட்டின் கூட்டுத் துணைத்தலைவர்களான பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மால்கம் மக்டனல்டும் சோவியத் உதவி வெளிவிவகார மந்திரி திரு. புஷ்கினும் நேற்று மூன்றரை மணி நேரம் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

லாவோஸுக்கான மூன்று நாடுகளைக்கொண்ட கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு புதியகட்டளைகள் பிறப்பிப்பது சம்பந்தமாக சர்வதேசக்கமிஷன் மகாநாட்டுக்கூட்டுத் தலைவர்களுக்குள் தோன்றியுள்ள கருத்து வேற்றுமை ஜெனிவா மகாநாட்டு அலுவல்களுக்கு முட்டுக்கட்டைபோட்டுள்ளது.

ஜெனிவா மகாநாட்டில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்கும் ஒரு முயற்சியாக மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப்பேசினர். லாவோஸிலுள்ள கட்டுப்பாட்டுக்கமிஷனின் அலுவல் வரம்புகள் பற்றிய பிரிட்டிஷ் யோசனையை ஏற்றுக் கொள்ளும்படி ரஷ்யாவை அவர் கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

திரு. மால்கம் மக்டனல்டும் திரு. புஷ்கினும் நேற்றுப்பேச்சு வார்த்தை நடத்தியபின் ஒரு அறிக்கை விடுத்தனர். சர்வதேசக் கமிஷனின் மகாநாடு மீண்டும் எப்பொழுது கூடுமென்பது பின்னர் அறிவிக்கப்படுமென்று அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இவர்களின் பேச்சுவார்த்தைக்குப்பின் ஜெனிவா மகாநாட்டில் அமெரிக்காவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டிருக்கும் திரு. ஹரிமனையும் பிரஞ்சுப்பிரதிநிதியையும் திரு. மால்கம் மக்டனல்ட் சந்தித்துப்பேசினர்.

## தென்வியட்நாம் புதிய மந்திரிசபை

சைகோன், மே 30

தென்வியட்நாம் குடியரசின் பிரதமர் நிகோடின்டயம் புதிய மந்திரிசபையை நியமித்துள்ளார். பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட புதிய மந்திரி சபையில் பொருளாதார அபிவிருத்தி, நாட்டின் பாதுகாப்பு, சமூக கலாசார விவகாரம் ஆகியவைகளுக்கென மூன்று புதிய இலாகாக்கள் நிறுவப்பட்டுள்ளன.

## போர்ச்சுக்கலில் 3 எதிர்க் கட்சி தலைவர்கள் கைது

லிஸ்பன், மே 30

போர்ச்சுக்கலின் மூன்று எதிர்க் கட்சித் தலைவர்கள் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர். போர்ச்சுக்கல் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் லிஸ்பனின் பிரபல வழக்கறிஞர்களாவர்.

அதிக அரசியல் உரிமையும் சமூக உரிமையும் கோரிப் போர்ச்சுக்கல் அரசாங்கத்துக்கு சென்ற மாதம் 68 எதிர்க் கட்சித் தலைவர்கள் கையொப்பமிட்டு ஒரு மகஜர் சமர்ப்பித்தனர். கையொப்பமிட்ட 68 தலைவர்களுள் இம் மூவரும் சேர்ந்து கையொப்பமிட்டிருந்தனர்.

# சில்சார் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதா?

ஷில்லாங், மே 30

அஸ்ஸாம் மொழிப் பிரசினை சம்பந்தமாக அஸ்ஸாம்ச் ராஜ்ய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி ஷில்லாங் வந்து சேர்ந்தார்.

அஸ்ஸாம் மொழிப் பிரச்சினையை ஒருவருட காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று நேருஜி கூறிய யோசனையை ராஜ்ய அரசாங்கத்திடம் வற்புறுத்தப் போவதாக திரு. சாஸ்திரி தெரிவித்தார். மொழிக் கிளர்ச்சி நடைபெறும் கச்சார் ஜில்லாவுக்கும் திரு. சாஸ்திரி செல்வார்.

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் அங்கீகரிக்க வேண்டுமென்று கோரி கச்சார் ஜில்லாவில் நடைபெற்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து சில்சார் பகுதியில் கலகம் ஏற்பட்டது. இக் கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பதினொருபேர் மாண்டனர்.

சில்சார் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை செய்ய அஸ்ஸாம் உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த நீதிபதி திரு. கோபால்ஜி மேஹ்ரோத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்

இந்த விசாரணை சம்பந்தமாக திரு. கோபால்ஜி ஆகஸ்ட் மாதம் 31ந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சார் ஜில்லாவில் தோன்றிய கலகத்தின் இயல்பு, அளவு, சில்சாரில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்ட சூழ்நிலை, பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நியாயந்தானு, கச்சார் ஜில்லாவில் கலகம் தோன்றியதும் அது சம்பந்தமாக அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்களா — ஆகியவை பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

# தனிப்பட்ட 'வான்' சேவையை கட்டுப்படுத்தச் சட்டம்

## 7 பிரயாணிகளுக்குமேல் ஏற்றிச் செல்ல தடை?

கொழும்பு, செவ்வாய்

ஏழு பிரயாணிகளுக்கு மேல் ஒரு மோட்டார் வான் ஆட்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடாதென்று வாடகைக்கு சேவை செய்யும் மோட்டார் வான்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவிருப்பதாக இலங்கை போக்குவரத்துசபைத் தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

மோட்டார் வான்களுக்கு விதிக்கப்படும் இக்கட்டுப்பாடு காரணமாக பிரயாணிகள் கஷ்டப்படாமலிருப்பதற்கு இங்கிலாந்திலிருந்து 239 புதிய பஸ்களை இறக்குமதி செய்ய இ. போ. சபை திட்டமிட்டுள்ளதாகவும், திரு. சில்வா கூறினர். ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வந்துசேரவிருக்கும் புதிய பஸ்கள் ஒவ்வொன்றிலும் 48 பிரயாணிகள் உட்கார்ந்து செல்லவும் 12 பேர் நின்று பிரயாணம் செய்யவும் இடவசதியிருக்குமாம். இப்பொழுது இ. போ. சபைக்கு வான்களினுல் அதிக போட்டியிருக்கும் நீண்ட தூரப்பாதைகளில் இப் புதிய பஸ்கள் சேவைக்கு விடப்படும் என்று திரு. சில்வா தெரிவித்தார்.

தனிப்பட்ட 'வான்'களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் எண்ணிக்கையை ஏழாகக் கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தை அரசாங்கம் விரைவில் கொண்டுவருமென்றும் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதன் மூலம் இக் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டுவரப்படுமென்றும் இதுதான் தற்போதைக்கு அரசாங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கையென்றும் இ. போ. சபைத் தலைவர் தெரிவித்தார். அவசியமேற்பட்டால் தனிப்பட்ட வான் சேவைக்கு எதிராக மேற்கொண்டும் புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டுவரும் என்று திரு. சில்வா தெரிவித்தார்.

## பூன்ஊம் - சிகானுக் சந்திப்பு வெற்றி

பாரிஸ், மே 30

லாவோசின் இடதுசாரி, வலதுசாரித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு லாவோசின் வலதுசாரித் தலைவரான இளவரசர் பூன்ஊம் சம்மதம் தெரிவித்துள்ளார்.

லாவோஸ் சம்பந்தமாக ஜெனிவாவில் நடைபெறும் 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாட்டில் இடதுசாரிப் பிரிவினரான பதட் லாவோஸ் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ள அனுமதித்ததை ஆட்சேபித்து ஜெனிவா மகாநாட்டைப் பகிஷ்கரித்து வரும் லாவோஸ் வலதுசாரியினரின் தலைவர் இளவரசர் பூன்ஊமை கம்போடியா பிரதமர் இளவரசர் நொரடம் சிகானுக் பேச்சு வார்த்தைக்கு அழைத்திருந்தார்.

லாவோசில் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இடதுசாரி, வலதுசாரி, நடுநிலைமைத் தலைவர்கள் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று இளவரசர் சிகானுக் முன்னரே வேண்டுகோள் விடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் பயனளிக்கவில்லை.

இளவரசர் நொரடம் சிகானுக்கின் அழைப்பை ஏற்று லாவோசின் வலதுசாரிப் பிரதமர் இளவரசர் பூன்ஊம் பிரான்சிலுள்ள நீஸ் என்ற நகருக்குச் சென்று நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

லாவோசின் இதர தலைவர்களைச் சந்திக்கத் தாம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் இச்சந்திப்பு பிரான்சில் நடைபெற வேண்டுமென்றும் இளவரசர் பூன்ஊம் தெரிவித்தார்.

## பெல்ஜிய ஆலோசகர்கள்

லியப்போல்ட்வில்லி, மே 30

கடாங்காவிலிருந்து வெளியேற்றப்பட்ட 15 பெல்ஜிய அரசியல் ஆலோசகர்களையும் மீண்டும் கடாங்காவுக்கு அனுப்புவதற்கு பெல்ஜியம் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்துவதாக அங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

## கல்கத்தாவில் கடும் புயல்

கல்கத்தா, மே 30

கல்கத்தாவிலும் அதை அடுத்த பகுதிகளிலும் நேற்று மாலை 6மணிக்கு 62மைல் வேகத்தில் கடும் புயல் வீசியது. இப் புயலின் விளைவாக பெரும்மரங்கள் வேரோடு சாய்ந்தன. போக்குவரத்துக்கள் சில மணி நேரம் தடைப்பட்டன.

# கிழக்குப் பாகிஸ்தானில் மீண்டும் பெரும் புயல்

டாக்கா, மே 30

கிழக்குப் பாகிஸ்தான் கடற்கரைப்பகுதியில் இன்று காலை பெரும் கடல் கொந்தளிப்பும் கடும்புயலும் வீசியதாக பாகிஸ்தானிலிருந்து வந்தசெய்தியொன்று கூறுகிறது.

இன்றுகாலை கிழக்குப்பாகிஸ்தான் கடற்கரைப் பகுதியில் மணிக்கு 100 மைல் வேகத்தில் புயல் வீசியதாகவும் கடல் அலைகள் எட்டடி உயரத்திற்கு பாய்ந்ததாகவும் அங்கிருந்து கிடைத்த செய்தி கூறுகிறது.

பல கிராமங்களிலும் தீவுகளிலும் பெருமளவு சேதம் ஏற்பட்டதாகவும் சிட்டகாங் நகருக்குத்தான் அதிக சேதம் விளைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த மாதத்தில் கிழக்குப் பாகிஸ்தானில் இத்துடன் இரண்டாவது தடவையாக புயல் வீசியுள்ளது.

## கோரிக்கையற்றுக் கிடக்கும் பென்ஷன் பணம்

யாழ்ப்பாணம், புதன்,

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான பென்ஷன் பணத்தில் ரூபாய் முப்பதினுயிரம் இன்னமும் கச்சேரியில் கோரிக்கையற்றுக் கிடக்கிறதாகத் தெரிகிறது. இப்பணத்தை இதற்குரிய பென்ஷனியர்கள் சிலர் இன்னும் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிருர்களாம்.

இம்மாதங்களுக்கான பென்ஷன் பணம் தமக்கு இன்னும் கிடைக்கவில்லையென்று இவர்களிற் பலரும் குறைபட்டிருந்தனர். ஆனல் இவற்றை யாழ்ப்பாணம் கச்சேரி எப்பொழுதிருந்தோ வழங்கியிருந்த போதிலும் பலர் இன்னும் இதனை பெற்றுக்கொள்ளவில்லையென அறியப்படுகிறது.

## தூத்துக்குடியில் படகு தயாரிப்பு

தூத்துக்குடி, மே 30

தூத்துக்குடியில் படகு தயாரிப்பு நிலையமொன்று நிறுவப்படவிருப்பதாகவும் இயந்திர மீன்பிடிப் படகுகளும் இங்கு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தமிழ்நாடு மீன்பிடிப்பகுதி மந்திரி திருமதி லூர்தம்மாள் சைமன் தெரிவித்தார்.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

Leyden L.I.L

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

வாழ்வைப் பார்க்கிலும் பெருஞ் செல்வம் வேறில்லை. அன்பும் ஆனந்தமும் நிலைத்தோங்கும் வாழ்வுக்கு எந்தச் செல்வமும் இணையாகாது.

—ஜோன் மோர்லி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 18உ (31-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தென்னுபிரிக்க குடியரசு

மிகுந்த சோதனைகளுக்கும் அபசகுனங்களுக்குமிடையே தென்னுப்பிரிக்கா இன்று குடியரசாகின்றது. காமன்வெல்த்திலும் சேர்த்துக்கொள்ளப்படாத நிலையில், தென்னுப்பிரிக்க குடியரசின் எதிர்காலம் மிகவும் சங்கடமாகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

தென்னுப்பிரிக்காவின் மொத்த விஸ்தீரணம் 4 லட்சத்து 72 ஆயிரம் சதுர மைல். அதாவது நம் இலங்கையைப் போல் சுமார் 19 மடங்கு பெரிது. மொத்த ஜனத்தொகை ஒரு கோடி 40 லட்சம். இதில் ஐரோப்பியர் 30 லட்சம் பேர்தான். இந்தியர்கள் நான்கு லட்சம் பேர் உள்ளிட்டு வெள்ளையரல்லாதாரின் எண்ணிக்கை ஒரு கோடி பத்து லட்சமாகும். என்றாலும் வெள்ளைக்காரர்களுக்குத்தான் அங்கு அரசியல் உரிமைகள். மற்றவர்களுக்கு வாக்குரிமையோ, பார்லிமெண்டில் பிரதிநிதித்துவமோ கிடையாது. வெள்ளையரல்லாதாருக்கு அரசியல் உரிமையளித்தால், தங்கள் செல்வாக்கு அடியோடு மறைந்துவிடுமென்று வெள்ளையர் அஞ்சி, கடுமையான நிறவேற்றுமை இன ஒதுக்கல் கொள்கையை கடைப்பிடித்து, பெரும்பான்மையான மக்களை தங்கள் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தில் அடக்கிவைத்து ஆண்டு வருகின்றனர்.

இந்த நிறவேற்றுமை, இன ஒதுக்கல் கொள்கையை விழித்தெழுந்துவிட்ட ஆசிய, ஆபிரிக்க மக்கள் பலமாக எதிர்க்கின்றார்கள். வெள்ளையரின் இந்த ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைய எந்தத் தியாகத்துக்கும் வெள்ளையரல்லாதார் முற்பட்டு போராட ஆரம்பித்து விட்டனர். குடியரசு விழாவை பகிஷ்கரிப்பதுடன், நாடெங்கும் வேலை நிறுத்தம் முதலிய கிளர்ச்சிகளைச் செய்கின்றனர். இதுவரை முன்ஜாக்கிரதையாகப் பத்தாயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்! பெரும்பான்மையான மக்களின் எதிர்ப்பினிடையே ஆரம்பமாகும் இந்தக் குடியரசின் ஆட்சி உருப்பட முடியுமா என்பது மிகவும் சந்தேகம்.

இதுவரை காமன்வெல்த் குடும்பத்தில் தென்னுபிரிக்க சேர்ந்திருந்ததால், அதற்கு ஒரு மதிப்பு இருந்தது. காமன்வெல்த்தின் பாதுகாப்பும் அதற்குக் கிடைக்க முடிந்தது. ஆனால் சமீபத்தில் கூடிய காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிலே, தென்னுப்பிரிக்காவின் இனத்துவேஷக் கொள்கையை பல பிரதம மந்திரிகளும் வன்மையாகக் கண்டித்தனர். இனத் துவேஷக் கொள்கையை கடைப்பிடிக்கும் வரை, தென்னுப்பிரிக்க குடியரசை காமன்வெல்த்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று பல ஆசிய ஆபிரிக்க பிரதமர்களும் கூறவே, தென்னுபிரிக்க பிரதமர் தமது மனுவை 'வாபஸ்' வாங்கிக்கொண்டு, காமன்வெல்த்திலிருந்தே விலகிவிடத் தீர்மானித்தார். இதனுல் புதிய தென்னுப்பிரிக்க குடியரசுக்கு உள்ளே மட்டுமன்றி வெளியிலும் எதிர்ப்பு அதிகமாக இருக்கின்றது.

இந்த எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து இக்குடியரசு தலைதூக்கி நிம்மதியாகி முன்னேற முடியுமா என்பது மிகவும் சந்தேகம். ஏற்கெனவே பல நாடுகள் தெ. ஆ. பொருட்களை பகிஷ்கரித்ததால் அந்நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்நிலையில் புதிய தெ. ஆ. குடியரசுக்கு இரண்டே வழிகளுண்டு. ஒன்று மேலும் தீவிர அடக்குமுறையைக் கையாண்டு பிடிவாதமாகத் தன் இனத்துவேஷக்கொள்கையை நீடித்துக்கொண்டு போய் நாசமடையலாம். அல்லது தன் இன ஒதுக்கல் கொள்கையை மாற்றிக்கொண்டு சமரச வழியைப் பின்பற்றி முன்னேறலாம். காமன்வெல்த் உறவை விட இன ஒதுக்கலே முக்கியமென்று கருதிய தென் ஆபிரிக்க அரசாங்கம், மனம்மாறி தன் பிடிவாதத்தை சுலபமாகத் தளர்த்துமென்று நம்புவதற்கில்லை.

[தென்மேற்கு ஆபிரிக்காவும் தென்னுப்பிரிக்க யூனியன் ஆதிக்கத்திலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் விஸ்தீரணம் 3 லட்சத்து 18 ஆயிரம் சதுரமைல்கள். ஜனத்தொகை நாலரை லட்சம்தான். ஐ. நா. தர்மகர்த்தா சபையின் மேற்பார்வைக்கு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள தெ. ஆபிரிக்கா மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.]

# எல்லா உயிர்களும் ஈடேற புனிதவாய் மலர்ந்தழுத ஆளுடைப் பிள்ளையார்

வாழ்க அந்தணர்
வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய்து எல்லாம்
அரன் நாமமே
சூழ்க வையகமும்
துயர் தீர்கவே.

மனிதன் ஒவ்வொன்றைப் பெறுதற்கு ஒவ்வொரு காலம் உண்டு. அறிவிக்குரிய கல்வியைப் பெறுவதாயினும் ஐந்து வயது நிரம்பவேண்டும். அவ்வாறே உலகத்தை ஆளும் உரிமையைப் பெறுவதாயினும் உரியவயது நிரம்பவேண்டும். ஆனல், ஞானத்தை எய்துதற்கு நாம் இத்தனை வயதுதான் உடையராதல்வேண்டும் என்பதில்லை. திருநாவுக்கரசர் இளமை கழிந்தபின் ஞானம் பெற்ருர். சுந்தரரும் மணிவாசகரும் இளமை கொழித்து வளமை நிரம்பிய வயதில் மெய்யுணர்வுபெற்றனர். ஞானசம்பந்தப்பிள்ளையாரோ மூன்று வயது நிரம்பிய பாலப்பருவத்திலேயே முற்றுணர்வைப்பெற்ருர். அதனை எவ்வாறு பெற்ருர்? அழுது அல்லவா பெற்ருர்!

மனிதன் மனத்தில் வலிமையிருக்கும்வரை இறைவனருள் வாய்க்காது. மனம் அன்பில் குழைந்து அழுது அழுது நெகிழ்கின்றபொழுதுதான் இறையருள் கைகூடப்பெறும். சுந்தரரும் மணிவாசகரும் மெய்யுணர்வு பெற்று அழுது அழுது தொழுதனர். ஞானசம்பந்தப்பெருமான் பிள்ளைப்பருவத்தில் அழுதார். பேரருளைப் பெற்ருர்.

அழுகையில் பலவுண்டு. சில அழுகை மகிழ்வளிப்பன. சில கவலையளிப்பன. சில பாராட்டுப்பெறுவன. சில இகழப்படுவன. குழந்தை பிறந்ததும் அழுகின்றதா என ஆவலுடன் கேட்கின்றனர். அதன் அழுகையைக்கேட்டு அனைவரும் பூரிப்படைகின்றனர். பெரியவர்கள்-வயது நிரம்பியவர் அழுவதைக் கண்டு சிறுவரும் நகைக்கின்றனர். ஆகவே, அழுகையில் மகிழ்வு தருவனவும் உள. சம்பந்தப்பிள்ளையார் அழுதார். அவர் தமக்காக அழவில்லை. உலகம் உய்ய அழுதார். ஒரு முறையா? இல்லை. மும்முறை அழுதார். வேதநெறி தழைக்க ஒருமுறை அழுதார். சைவத்துறை விளங்க மற்றொருமுறை அழுதார். ஆன்மகோடிகள் ஈடேற மூன்ரும்முறை அழுதார். அவரது அழுகையில் எத்துணை கருணை, பேரருள் நிறைந்துகிடக்கின்றது! நாம் நம் நன்மைகருதி அழும்போது இறைவன் பராமுகமாய் இருக்கின்ருன். நாமே பிறர் நயம் வேண்டி முறையிடும்போது இறைவன் அருள் செய்கின்ருன். பிள்ளையாரோ பிறர் சிலரது நன்மையன்றி நிகழ்கால எதிர்கால வாழ்வுடைய எல்லா உயிர்களும் ஈடேற அழுதார். உடனே இறைவன் விரைந்துவந்து அருள்செய்தார். ஞானப்பாலை அருளினர். அது அருளின காலமுதல் வேதப்பொருளும் மெய்ப்பொருளும் நிறைந்த ஞானப்பாடல் சுரக்கவும் பரக்கவும் தொடங்கின. தமிழ்நாடு உய்ந்தது. அதன்மூலம் சகல உயிரினங்களும் தழைத்தன.

திருஞானசம்பந்தப்பிள்ளையர் ஏனையோரைக்காட்டிலும் குறைந்தகாலமே மண்ணில் வாழ்ந்தருளினர். ஆயினும் மற்றையோரிலும் அதிகமான அருட்பாடல்களையும் அருட்செயல்களையும் செய்தருளினர். தாம் வாழ்ந்துகாட்டித் தம்மைச் சார்ந்தாரையும் வாழச்செய்தார். தம்மைக் காணவும் சேரவும் வாய்ப்பில்லாத மக்களுக்கு அவரருளிய பாடல்கள் வழிகாட்டியாயும் மந்திரமாயும் துணைசெய்கின்றன. ஒரு சிறிய பெருந்தகையாரால் ஒரு காலத்தில் வாழ்ந்தமக்கள்மட்டுமன்றி பிறபிற்காலத்து மக்களும் மற்றுள்ள உயிர்களும் நன்மையடைந்தன! இதற்குக் காரணமாய் நின்றது அன்று அவர் அழுத அழுகையன்றே!

## "ஆலவாய் அரன் நிற்கவே ஈனர்கட்கு எளியேனலேன்"

**இன்று திருஞான சம்பந்தரின் திருநாள். "தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கையில் நான் தர்மத்தைக் காக்க அவ்வப்போது அவதரிப்பேன்" என்று பகவான் கூறியபடி, நாட்டிலே சைவ தர்மம் குன்றிய சமயத்தில், முருகனே திருஞான சம்பந்தராக அவதரித்து சைவத்தையும் தமிழையும் பாதுகாத்தாரென்பது பலரதுநம்பிக்கை. தெய்வத் தமிழ் வல்ல ஞானசம்பந்தரையும் அவர் நமக்கு விட்டுச் சென்றுள்ள அருஞ் செல்வத்தையும் இங்கு நினைவு கூர்வோம்!**

ஏழாம் நூற்ருண்டு. மதுரையிலே சீர் நெடுமாறன் என்ற கூன்பாண்டியன் அரசு புரிந்து வந்தான். அவன் சைவசமயம் விட்டு புறச்சமயத்துக்கு மாறினன். இதனுல் பாண்டிநாடெங்கும் சைவசமயம் குன்றி, புறச்சமயம் ஆதிக்கம் பெற்று வந்தது.

அரசனின் மனைவியான மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மீண்டும் பாண்டிநாட்டிலே சைவநெறியைப் பரப்ப, சீர்காழியிலிருந்து திருஞானசம்பந்தரை மதுரைக்கு எழுந்தருளுமாறு அழைப்பு அனுப்பினர்.

அவ்வழைப்பினை ஏற்று மதுரைக்குப் புறப்பட்ட சம்பந்தரை அப்பர்சுவாமிகள் "நாளும் கோளும் நன்ருக இல்லை. ஆதலால் தனியே தாங்கள் போக வேண்டாம்" எனத் தடுத்தார். இளம் கன்று பயமறியாதென்று கருதினர். ஆனல் ஞானப்பால் குடித்த சைவ இளம் சிங்கம் நாளுக்கும் கோளுக்கும் அஞ்சவில்லை.

"வேயுறு தோளி பங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுல்,
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டின் உடனே
ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே".

["மூங்கில்போலும் தோளினையுடைய உமாதேவியாரை இடது பாகத்தில் உடையவரும், விடத்தை உண்டு கண்டத்தில் வைத்தவரும் ஆகிய சிவபெருமான், மிகவும் இனிய வீணையை வாசித்து, குற்றமில்லாத சந்திரனையும் கங்கையையும் தமது திருமுடியின் மீது சூடி, அடியேனுடைய மனத்தில் எழுந்தருளி யிருக்கின்ற காரணத்தால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு கேது என்னும் பாம்புகள் இரண்டு ஆகிய நவக்கிரகங்கள் எல்லாவற்றுலும் உண்டாகும் தீங்குகள் முற்றிலும் விடுபட்டு ஒழியும்.] அன்றியும் அவைகள் (நவக்கிரகங்கள்) எனக்கு நன்மையைச் செய்வன ஆகும். அவைகள் மெய்யடியார்களுக்கு மிகுதியும் நன்மையைச் செய்யும்.) என்ற கருத்துப்பட அருமையான திருப்பதிகம் பாடவே அப்பர் சுவாமிகள் ஆனந்தக் கண்ணீர் விட்டு, ஆசி கூறி ஆளுடைப் பிள்ளையை மதுரைக்கு அனுப்பிவைத்தார்.

பால் மணம் மாருத இச்சிறு பையனை கண்டார் மங்கையர்க்கரசியார். மிகவும் வலியவர்களான எதிரிகள் இவரை மிரட்டி அடக்கிவிடுவர் என்று அஞ்சினர். இதை உணர்ந்த ஞானசம்பந்தர்,

"மானினேர் விழி மாதராய்வழு
திக்குமா பெருந் தேவிகேள்,
பானல்வா யொரு பாலனீங்
கிவன்
என்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை ஆதிடாய
இடங்களில்
பல அல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு
ஆலவாய் அரன் நிற்கவே"

என்று தைரியம் கூறினர். "ஆலவாய் அண்ணல் எனக்குத் துணை நிற்கையில் எந்த ஈனர்களுக்கும் நான் இளைத்தவனல்லன். தாங்கள் கவலைப்பட வேண்டாம். இறை அருளால் அவர்களை எல்லாம் வென்று விடுவேன்" என்று உறுதிகூறுகின்ருர். தெய்வ அருள் பெற்றுள்ள மையாலே, நாளும், கோளும், யாரும் தம்மை எதுவும் செய்ய முடியாதென்று அவ்வளவு உறுதியான திடநம்பிக்கை கொண்டிருந்தார் அவர். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை.

இப்பாடல்களெல்லாம் அவர் பாடி அருளியது நமக்காகவே. நமக்கு தெய்வ நம்பிக்கையும் துணிவும் ஏற்பட இப்பாடல்கள் பெரிதும் உதவுவதாகவுள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

"உங்கள் வீட்டுக் கொல்லையிலே, ஒரு எலுமிச்சை மரமும், சில பப்பாளி மரங்களும், ஒரு முருங்கை மரமும், இடமிருந்தால் ஒரு காய்கறி பாத்தியும் போட்டு உணவு உற்பத்தியைக் கட்டாயம் பெருக்க வேண்டும்" என்று இலங்கை வர்த்தகர் சங்கக் காரியதரிசி கேட்கின்ருர்.

இப்படிக் கூறுவதுடன் மட்டுமல்லாமல் இதற்கான விதைகளையும் கேட்போருக்கு இலவசமாகக் கொடுக்கவும் முன்வந்திருக்கிருர்கள். இது பாராட்டத்தக்க பணியாகும்.

* * *

சென்ற யுத்த காலத்திலே வீட்டுத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் முதலிய இடங்களிலெல்லாம் காய்கறி உணவு வகைகளை உற்பத்திசெய்ய அரசாங்கம் ஓர் இயக்கம் நடத்தியது. அதே போல் இப்போதும் செய்ய விருப்பதாயும், பிரதமர் சிறிமா இந்த இயக்கத்துக்கு தலைமைவகித்து நடத்துவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

அரசியல் முதலியவற்றில் கருத்துவேற்றுமை என்ன இருப்பினும், உணவு உற்பத்தி விஷயத்தில் எவ்வித வேற்றுமையும் இருக்க முடியாது. எல்லாக் கட்சியினரும், எல்லா மக்களும் தங்கள் சுய நன்மையைக் கருதியாவது இந்த நல்ல பணியில் ஈடுபடவேண்டும்.

* * *

யாழ்ப்பாணத்தில் ஒரு வாழைப்பழம் 5 அல்லது 6 சதம் கப்பல் பழம் ஒன்று 15 சதம். மார்க்கெட் சென்று மாம்பழம் விலை கேட்டேன். இது மாம்பழக் காலமல்லவா? ஒரு 'கறுத்தக் கொழும்பான்' (சின்னது) விலை 25 சதம் என்ருர். இம்முறை மாம்பழம் காய்ப்புக் குறைவில்லை. ஆனல் இவ்வளவு விலை என்ருல், ஏழை மக்கள் எப்படி வாங்கிச் சாப்பிடமுடியும்? இப்பழங்களெல்லாம் ஏழைகளுக்கு எட்டாத உச்சாணிக் கொம்புக்கு ஏறியுள்ளன!

காய்கறி, பழங்கள் இவற்றை அதிகமாக உண்டால்தான் தேகம் ஆரோக்கியமாக இருக்கும். இவையெல்லாம் சத்தான உணவுகள். ஆனல் பொது மக்களுக்கு இவை கிடைக்க முடியாதபடி விலை வாசிகள் உயர்ந்துள்ளன.

விலைகளைக் குறைக்க அரசாங்கம் எவ்வளவோ முயற்சி செய்வதாகக் கூறியும், விலைகள் வரவர உயர்கின்றனவேயன்றி குறையும் வழியைக் காணவில்லை.

ஆகவே தன் கையே தனக்குதவி என்றபடி நம் வீட்டிலே சிறிது இடமிருந்தாலும், ஏதாவது உணவு பயிரிடுவோம். இடமில்லாவிட்டாலும், தொட்டி, பெட்டி இவற்றில் கீரை, காய்கறி முதலியவற்றை விளையாட்டாகப் பயிரிடுவோம். விதைவிதைத்து தண்ணீர் விட்டால் போதும். பயிர்கள் வளர்ந்து சில நாட்களில் நல்ல பலன் கிடைக்கும்.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது என்றும் விலைவாசிகள் உயருகின்றனவென்றும் கூக்குரலிடுவதால் பயனில்லை. இவ்வித ஆக்கவேலையில் ஈடுபடுவதால் நாம் காய்கறி உணவுப் பொருள்களை நம் வீட்டிலேயே உற்பத்திசெய்து மகிழ்வதுடன் செலவையும் குறைத்துக் கொண்டவர்களாவோமல்லவா?

# ஒன்றேகால் இலட்சம் தொழிலாளர்

## தென்னுபிரிக்காவில் வேலைக்குச் செல்லவில்லை

ஜோகன்னர்ஸ்பர்க், மே 30

தென்னுபிரிக்காவில் சுமார் ஒன்றேகால் இலட்சம் தொழிலாளர் நேற்று வேலைக்குப் போகவில்லை. டர்பனில் இந்தியருடைய கடைகள் மூடப்பட்டிருந்தன. பருத்தித்துணி ஆலைகளுக்குத் தொழிலாளர் வேலைக்குச் செல்லவில்லை. இன்று ஒரு பருத்திஆலை மூடப்படவிருக்கிறது.

நாளை புதன்கிழமை தென்னுபிரிக்கா குடியரசுநாடாகிறது. தென்னுபிரிக்க அரசாங்கத்தின் இனஒதுக்கல் கொள்கையை ஆட்சேபித்து குடியரசு தினக்கொண்டாட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படியும் மூன்று தினங்களுக்கு வீட்டை விட்டு வெளியே செல்லாது அமைதியாக வேலைநிறுத்தம் செய்யும்படியும் அகில ஆபிரிக்க தேசிய இயக்கத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர் பலர் வேலைக்குச் செல்லவில்லை. டர்பனில் இந்தியர்களின் கடைகள் திறக்கப்படவில்லை. நேட்டாலில் பெருந்தொகையான மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் செல்லவில்லை.

அரசாங்க ஊழியர்கள்வேலைக்கு வராவிட்டால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கேப்டவுனில் உள்ள தென்னுபிரிக்க பார்லிமெண்ட் கட்டடத்தின் சபாமண்டபத்தில் பல வருடங்களாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்த ஜோர்ஜ் மன்னர், மேரிராணி ஆகியோரின் படங்கள் அங்கிருந்து நேற்று அகற்றப்பட்டன.

தொழிலாளர்களின் இந்த அமைதியான வேலை நிறுத்தத்தையும் இனஒதுக்கல் கொள்கைக்கு எதிராகத் தோன்றியுள்ள எதிர்ப்பு இயக்கத்தையும் உத்தேசித்து இது வரை பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தென்னுபிரிக்காவில் அவசரகாலநிலைமையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

---

### வாசுதேவாச்சார் நினைவு கூட்டம்

சென்னை, மே 30

காலஞ்சென்ற சாகித்திய கர்த்தா மைசூர் வாசுதேவாச்சார் நினைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகச் சென்னை கலா க்ஷேத்திரத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. டி. எல். வெங்கட்ராமையர் தலைமை வகித்தார்.

ஸ்ரீ வாசுதேவாச்சார் மகத்தான கர்னடக மரபைச் சேர்ந்தவர் என நீதிபதி அவரைப் பாராட்டிப் பேசினர். பிரபல வித்வான்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் ராஜாஜி, முசிரி சுப்ரமண்ய ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாதையர், ஸ்ரீ சந்திரசேகரன், வெங்கடசாமி நாயுடு ஆகியோர் அவரைப் பாராட்டிப் பேசினர்.

---

### தட்டெழுத்து ஸ்தாபனங்களுக்கு மானியம்

சென்னை, மே 30

தமிழ் தட்டெழுத்தில் பயிற்சியளிக்கும் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அடுத்த ஏப்ரல் மாதம் வரை 50 ரூபாய் வீதம் மானியம் அளிப்பதென தமிழ் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

---

### இலங்கை எழுத்தாளருக்கு மாஸ்கோவில் பாராட்டு

மாஸ்கோ, மே 30

பிரபல சிங்கள எழுத்தாளரான திரு. மாட்டின் விக்கிரமசிங்கவின் 70 வது பிறந்த தினம் சம்பந்தமாக மாஸ்கோவில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அப்போது பேசிய ரஷ்ய எழுத்தாளர் திரு. சாப்ரனேவ், திரு. விக்கிரமசிங்க மனிதப்பண்பு நிறைந்தவர் என்றும், தேசாபிமானி என்றும் பாராட்டினர். ரஷ்ய மொழியில் ஆக்கப்பட்ட திரு. விக்கிரம சிங்கவின் நூல்களையும் சாப்ரனேவ், புகழ்ந்துரைத்தார். இந்த வைபவத்தில் இலங்கை மாணவர்களும், மற்றும் பல இலங்கையர்களும் கலந்து கொண்டனர்.

---

### 3 ஞாபகார்த்த கூட்டங்கள்

கொழும்பு, செவ்வாய்

காலஞ் சென்ற தலைவர் சர் பாரன்ஜயதிலகா, ஜனப் டி. பி. ஜாயா, சிங்கள இலக்கிய எழுத்தாளர் திரு. டபிள்யூ. ஏ எஸ். சில்வா ஆகியோரின் ஞாபகார்த்தமாக நாளை கொழும்பில் மூன்று கூட்டங்கள் நடைபெறும். வெள்ளவத்தை "ஹைஸ்ட்ரீட்" வீதிக்கு "சில்வா மாவத்தை" என்றும் பெயர் மாற்றம் செய்யப்படும்.

---

### ஆலவாய் அரன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இறை அருளை எப்படிப்பெறுவது? "தோடுடைய செவியன்" என்ற முதல் பாட்டிலேயே இதைத்தெரிவிக்கின்றூர் அவர். "ஏடுடைய மலரரால் முனைநாள் பணிந்தேத்தி" யதால் தான் அருள் செய்தாராம், அந்த "உள்ளம்கவர் கள்வன்". புஷ்பங்களால் அருச்சனை செய்து வழிபட்டதால் அருள்கிடைத்ததென்கிறூர். புஷ்பங்களிலே எது மிகச்சிறந்தது? நெஞ்சமாகிற தாமரைமலர்தான். நெஞ்சத்தை ஆண்டவனுக்கே இடமாக்கி, வேறு எவ்வித எண்ணங்களுக்கும் அங்கு இடமில்லாமல் செய்ததும், இறை அருளும் கூடுகின்றது. அச்சம், கவலை, தோல்வி எல்லாம்மறைந்து, துணிச்சலும், புதுபலமும், மனச்சாந்தியும் ஏற்பட்டு, தொட்டதெல்லாம் வெற்றியாகின்றது.

திருஞானசம்பந்தரின் வாழ்க்கையும், அவர் பாடியுள்ள மூன்று திருமுறைகளும் நமக்கு அறிவுறுத்துவது இந்த நம்பிக்கை செய்திதான்.

"புலனைந்தும் பொறி கலங்கி
நெறிமயங்கி அறிவழிந்திட்டு
ஐமேலுந்தி
அலமந்தபோது, ஆக அஞ்சேல்
என்று அருள்செய்வான்
அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள்நடமாட
முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி அலமந்துமரமேறி
முகில்பார்க்கும்திருவையாறே"

என்கிறூர். நாம் செய்யும் வகையறியாது மதிமயங்கி மிகவும் தவிக்கும்வேளையிலே, "அஞ்சேல்" என்று அருள்செய்யும் அண்ணல் இருக்கின்றூர் என்பதை, நமக்கு அறிவுறுத்துகின்றூர். அவரது இத்தெய்வீகப் பாடல்கள் மனிதகுலத்துக்கே நல்ல வழிகாட்டும் அருட்செல்வங்களாகும். உலகின் பல மொழிகளிலும் இப்பாடல்களை மொழிபெயர்ப்பது, தமிழறியாத பலருக்கும் பெரிதும்பயன்படலாம்.

---

### அரசியல் திட்ட மகாநாடு

லண்டன், மே 30

மேற்கு இந்தியா சம்மேளனத்தின் பிரதம மந்திரி சர். கிருன்லி ஆதம்ஸ், இன்று லான்காஸ்றர் ஹவுஸில் நடைபெறப்போகும் அரசியல் திட்ட மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்துசேர்ந்துள்ளார்.

---

### புதை பொருள் ஆராய்ச்சி இலாகா

#### அனுராதபுரத்திற்கு மாற்றப்படும்

கொழும்பு, செவ்வாய்

புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவை கொழும்பிலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி உள்நாட்டு, கைத்தொழில், கலாசார விவகார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையில் அநுராதபுரத்தைப் போன்று பொலனறுவையும் புனித நகரமாகப் பிரகடனப்படுத்தவும் புனித இடமாகப் பிரகடனப்படுத்தப்படும் இடத்திலுள்ள வீடுகளையும் கடைகளையும் அப்பகுதிக்கு வெளியே அகற்றவும் மந்திரி தீர்மானித்துள்ளார்.

புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவை அநுராதபுரத்துக்கு மாற்றுவதனுல் பொலனறுவை நகரத்தை புனிதநகரமாகப்பாதுகாக்கும் வேலையைத் துரிதப்படுத்த முடியும் என்று திரு. மைத்திரிபால சேனநாயக்கா அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

புதைபொருள் ஆராய்ச்சி இலாகா அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டதும் அது தொடங்க வேண்டிய வேலைகள்பற்றி இப்பொழுதே திட்டமிடப்பட்டு வருவதாகவும் சென்ற நூருண்டுகளுக்குள் கட்டப்பட்ட கட்டடங்கள் இடிக்கப்பட்டதும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவுக்கு நிறைய வேலை இருக்குமென்றும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

---

### ஆபத்தில் இருக்கும் மருத்துவ விடுதி

பத்தேகம, செவ்வாய்

பத்தேகமவிலுள்ள அரசினர் மருத்துவ விடுதியின் கட்டிடம் பாழடைந்த நிலையில் இருக்கின்றது. அண்மையில் ஏற்பட்ட புயல் காற்றினுல் அறையொன்றின் கூரையும் சேதமுற்றுக்கிடக்கின்றது.

வருடகாலமாக திருத்தப்படாமல் இருந்துவரும் இக்கட்டிடத்தை திருத்தினலோ அன்றி, பத்தேகம கிராம ஆஸ்பத்திரி எல்லையில் இருக்கும் புதிய கட்டிடத்திற்கு இந்த மருத்துவ ஆஸ்பத்திரியை மாற்றினுலோ அன்றி இங்கு உள்ள நோயாளிகளின் வாழ்வு பெரிய அபாயத்திற்குள்தான் இருக்கும்,

சரியான மின்சாரத்திட்டம் இல்லாததினுல், இந்த மருத்துவ விடுதி இரவு வேளைகளில் இருளில்தான் இருந்துவருகிறது. போத்தல் விளக்குகளையும், லாம்புகளையும் வைத்துக்கொண்டு வேலைபார்ப்பது, மருத்துவப் பெண்களுக்கும் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கும் பெரும் கஷ்டமாக இருந்துவருகிறது.

---

### "முஸ்லிம் லீக்கை கலைத்துவிடுக!"

சென்னை, மே 30

இந்திய முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட்டு வகுப்புவாதமற்ற ஒரு ஸ்தாபனத்தில் சேருமாறு இந்திய முஸ்லிம் லீக் தலைவர் ஜனுப் இஸ்மாயிலை தென்னிந்திய முஸ்லிம் தலைவர் ஜனுப் முகமத் இப்ராகிம் ஒரு பகிரங்க கடிதத்தில் கேட்டுள்ளார்.

---

### போதை வஸ்துக்கள் கடத்துவதை தடைசெய்ய கமிட்டி

கொழும்பு, செவ்வாய்

போதை வஸ்துக்களைக் கள்ளக் கடத்தல் செய்வதற்கு இலங்கை ஒரு பிரதான இடமாக விளங்கி வருவதாக அரசாங்கத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் 'கண்காணிப்பு கமிட்டி' ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம்தீர்மானித்துள்ளது

இந்தக் கமிட்டியில் பொலிஸ், கடற்படை, சுலால் அதகாரிகள் ஆகியோர் இடம் பெறுவர்.

மற்றைய ஆசிய நாடுகளில் ஏற்கனவே இருக்கும் கண்காணிப்பு கமிட்டிகளுடன் கலந்து இவ்வித கள்ளக் கடத்தலைத் தடுக்க இந்த கமிட்டி நடவடிக்கை எடுக்கும்.

பாகிஸ்தானில் நடைபெற்ற மகாநாட்டைத் தொடர்ந்து இந்தக் கள்ளக் கடத்தல் நடைபெறும் நாடுகளிலெல்லாம் கண்காணிப்பு கமிட்டிகள் உருவாக்கி வருவதாகத்தெரிகிறது.

மேற்கு நாடுகளுக்கு போதை வஸ்துக்கள் கடத்துவதற்கு இலங்கை சேகரிப்பு இடமாக கள்ளக் கடத்தல் செய்பவர்களால் பாவிக்கப்பட்டுவருவதாக அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

### சாராய விற்பனை குறைகிறது விலையேற்றம் காரணம்

கொழும்பு, செவ்வாய்

புதிய விலையேற்றத்தினுல் சாராய விற்பனை குறைந்துள்ளதாக கலால் கமிஷனர் திரு. டி. பி. வடுகொடபிட்டியா கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவுக்கு அறிவித்துள்ளார்.

மக்கள் மதுபானம் அருந்துவதை நிறுத்தியதால் இவ்விதம் விற்பனை குறைந்துவிட்டதாக தாம் கருதவில்லையென கலால் இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாராயத்தின் விலையைக் குறைத்தால் விற்பனையைப் பெருக்கலாமா என்பது பற்றி உள்நாட்டமைச்சு ஆலோசனை செய்துவருவதாகத்தெரிகிறது.

---

### பிரேரணை ஒழுங்கற்றது எனத் தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு மேயர், மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கத்துக்கு ஆதரவு காட்டுவதாக கொள்ளுப்பிட்டி முனிஸிபல் அங்கத்தினர் திரு. டி. எஸ். மல்லவராச்சி கொண்டுவந்த ஒரு பிரேரணையை ஒழுங்கற்றது என மேயர் தீர்ப்பளித்தார். இப்பிரேரணையை நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதில் மேயர் பிடிவாதம் காட்டினுல், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதுபற்றி தாம் இதர இடதுசாரி அங்கத்தினர்களுடன் பேசப்போவதாயும் திரு. மல்லவராச்சி கூறினர்.

---

### இ. போ. ச. கமிஷன் தலைவர்

#### திரு. ஹெர்மான் பீரிஸ் நியமிக்கப்படலாம்

கொழும்பு, செவ்வாய்

பொக்கிஷ இலாகாவின் உதவிக் காரியதரிசியாய் இருந்து ஓய்வு பெறும் திரு. ஹெர்மான் பீரிஸ், உத்தேச பஸ் கமிஷன் தலைவராக நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது. இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் ஆரம்பம்முதல் இதுவரையுள்ள வேலைகள்பற்றி இக்கமிஷன் விசாரணை நடத்தும்.

---

### உதகையில் இந்து அறநிலைய கமிஷன் கூட்டம்

உதகமண்டலம், மே 30

இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனின் கூட்டம் உதகமண்டலத்தில் கூடியது. கூட்டம் 10 நாள் நடக்கும் என கமிஷனின் தலைவர் டாக்டர் ஸி. பி. இராமஸ்வாமி ஐயர் தெரிவித்தார். அதன்பின் கமிஷன் பேலூருக்கும், பழனிக்கும் செல்லுமென்றும், மேற்கு வங்காளம், ஒரிஸா, பீகார் ஆகிய ராஜ்யங்களுக்கும் அது செல்லுமென்றும் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே 8 ராஜ்யங்களில் கமிஷன், விசாரணையை முடித்துவிட்டதாயும், நவம்பர் மாதத்திற்குள் இதர ராஜ்யங்களிலும் விசாரணை முடிந்தபின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

### கல் ஓயா வடக்கில் குடியேற்றப் பிரதேசம்

கொழும்பு, செவ்வாய்

கல்ஓயா நதியின் வடக்குப் பகுதியில் காடுகளை அழித்துக் குடியேற்றப் பிரதேசம் ஒன்றை அமைக்க அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.


'சிரநேத்திரஞ்சனத் தைலம்'
விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினுல் துன்புறவும்
வேண்டுமா ?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்:
மு. க. ஜெகநாதன்
யூனனி கண் நிபுணர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

நாவாந்துறை கொலைவழக்கு

# சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், புதன் நாவாந்துறைக் கொலை வழக்கில் எதிரியை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்பதற்கு யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் உத்தரவிட்டார்.

நாவாந்துறையைச் சேர்ந்த குட்டி என்றழைக்கப்படும் முருகுப்பிள்ளை குலவீரசிங்கம் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த 27 வயதான சின்னப்பு சிவகுரு என்பவர் மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றப் பகுதியைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரம் இவ் வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இளையதம்பி என்பவரின் மனைவி தங்கம்மா (50 வயது) சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்.

காலஞ் சென்ற குட்டி நான்கு வருடமாக என்னுடன் வசித்து வந்தார். அவருக்குச் சொந்த ஊர் பருத்தித்துறை. யாழ்ப்பாணத்தில் அவர் மேசன் வேலை செய்து வந்தார். 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ந் திகதி அவர் வழக்கம் போல் வேலைக்குச் சென்ருர். மத்தியானச் சாப்பாட்டுக்கு வந்தார். அன்று காலை காலஞ் சென்றவரும் எதிரியும் சண்டையிட்டதாக நான் அறிந்திருந்தேன். என்ன நடந்தது என்று அவரிடம் கேட்டேன். பின்னேரம் வந்து எல்லாம் விபரமாகச் சொல்வதாக அவர் தெரிவித்தார்.

பின்னர் வேலைக்குச் சென்று விட்டு மாலையில் வீட்டுக்கு வந்தார். காலையில் எதிரி தன்னைச் சந்தித்து; "எனது கத்தியைக் களவெடுத்துவிட்டாய்" என்று கூறியதாகவும் இதைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் பின்னர் இருவரும் அடிபட்டதாகவும் குட்டி தெரிவித்தார். எதிரி தனது பல்லை உடைக்கப் போவதாகப் பயமுறுத்தியதாகவும் அவர் கூறினர்.

இதன்பின் குட்டி பெரிய கடைக்குப் போய்விட்டு மாலை 7 மணியளவில் திரும்பி வந்தார். சாய்வு நாற்காலியில் வந்து படுத்திருந்தார். அவர் படுத்திருந்த இடத்துக்கு சுமார் ஆறு அடி தூரத்தில் விருந்தையில் நான் உட்கார்ந்திருந்தேன். எனது வளர்ப்பு மகளான 7 வயது சாந்தகுமாரி பாடம் படித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். எனது மற்றொரு வளர்ப்பு மகளான 13 வயது தவமணி எங்களுக்குப் பின்னலிருந்தார்.

### எதிரி திடீரென்று வந்தார்

அச்சமயம் எதிரி திடீரென்று வந்து "காலையில் என்ன நாட்டாண்மை காட்டினய்" என்று சொல்லிக் கொண்டு சாய்வு நாற்காலியில் படுத்திருந்த குட்டியைப் பிடித்துச் கொண்டு கையை உயர்த்திக் குத்தினர். குட்டி போராடிக் கொண்டு எழுந்து கொள்ள முயன்ருர். கட்டில் சரிந்து விழுந்தது. இருவரும் கீழே விழுந்தனர். குட்டி கீழேயும் எதிரி மேலேயும் விழுந்து கிடந்தனர். "என்னைக் குத்திப் போட்டான்" என்று குட்டி சத்தம் போட்டது எனக்கு கேட்டது நான் ஓடிப் போய் பின்னல் நின்றபடி எதிரியைப் பிடித்தேன். ஆனல் அவரை என்னல் பிடிக்க முடியாது போய்விட்டது.

அப்பொழுது எதிரியின் மனைவி ஓடி வந்து எதிரியைப் பிடித்துக் கொண்டார். இச்சமயம் குட்டி எழுந்து "ஐயோ என்னைக் குத்திப்போட்டான்" என்று சத்தமிட்டபடி வெளியே ஓடினர்! எதிரியை அவரது மனைவி, வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனர். குட்டி ஒரு காரில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானர்.

எதிரியை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஆங்கிலம் பேசும் ஜூரிகளின் முன் தன்னை விசாரணைசெய்ய வேண்டுமென்று எதிரி கேட்டுக் கொண்டார்.

எதிரியின் சார்பில் திரு. சாம் ஏ. சபாபதியும் திரு. ஆர். விசுவநாதனும் ஆஜரானர்கள்.

## நேருவுக்கு தெரியாது

புதுடில்லி, மே 30

துர்க்காபூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டபின் பாரதப் பிரதமர் நேரு இன்று காலை புதுடில்லி வந்து சேர்ந்தார். ஜூன் மாத இறுதியில் அமெரிக்க ஜனதிபதி கென்னடியை திரு. நேரு சந்திப்பார் என்று நியூயார்க் பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தியைப்பற்றி நிருபர்கள் ஸ்ரீ நேருவிடம் கேட்டபொழுது தமக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது என்று பதிலளித்தார்.

---

## வாக்காளர் இடாப்பு

முள்ளியவளை, செவ்வாய்

வவுனியாப் பட்டின சபை வாக்காளர் இடாப்புத் தயாரிக்கும் வேலை, ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று தெரியவருகிறது.

## லட்சாதிபதியாகும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசாக வழங்கப்படுகிறது:-

ஆர். எச். பியசேன, புகையிரத வீதி, நாராம்மலை; பி. வேலுசாமி. 103, தெமட்டகொடை, மருதானை; பி. ஜி. வேட்டி, மலயகொடை, வன்சவெல்ல, காலி; யூ. பரமானந்தன், கெமிகல் வேர்க்ஸ், பரந்தன்; டபிள்யூ. ஜி. தர்மசேன, விமானத்தளம், அம்பாரை; ஈ. ஜி. ஜேம்ஸ், ரோஸ்லின்ஹில் தோட்டம், பேராதனை; ஏ. ஈ. பெரேரா, கூட்டுறவுக் காரியாலயம், காலி; யூ. ஜி. நந்தசேன, 301, திருமலை வீதி, மாத்தளை; ஜி. கே. வில்லியம் சீவா, கட்டுகஸ்தோட்டை, கண்டி; யூ. என். சந்திரா, நிம்பன் ஹோட்டல், கொழும்பு; எஸ். ஜி. வேலன் அப்புஹாமி, கணேவத்தை, நிகடலுபொத்தை; எம். எம். அப்துல்ல, 119, மன்னர் வீதி, புத்தளம்; பி. ஏ. பொடிநோன, ஸ்ரோக்லேண்ட் பிரிவு, உடுகம; டி. எப். டி. ஜயசூரியா, போபிறிய, பமுனுகம; எச். எல். நந்தசேன. ஹைபொறஸ்ற், சந்தபொல; என். டி. டி. பெரேரா, கோணவில, களனி; டபிள்யூ. டி. ரெட்றிகோ, 287, சிங்காரமுல்ல, களனி; கே. டி. பிறட்றிக், டிவுலபெவெல, மகாஈடான; எச். எம். ஜி. கரோலிஸ் அப்புகாமி, 941, 3-ம் டிவிஷன், மருதானை; பி. ஜி. ஜன்மி, ஹிகொட, உறுபொக்கி; எச். ஜி. நோனஹாமி, 109, டீன்ஸ் வீதி, மருதானை; பி. எச். வால்டர், பீ. ஏ. அன்ட் கம்பனி, நனுஓயா; எஸ். எம். ஆர். கிரிபண்டா, நிகடெனியவ, எகிலுவெல; டபிள்யூ. ஜி. ஜயசேகரா, கலுகவகடி, ஈபாவெல; டி. ஏ. பேபிநோன, எலக்கல.

---

## இராதாகிருஷ்ணன்

புதுடில்லி, மே 28

மங்கோலிய தேசீய விஞ்ஞானக் கழகத்தின் கௌரவ உறுப்பினராகடாக்டர் இராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



## 650 பேருக்கு வேலை கிடைக்கும்

### டயர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் அமைக்கவிருக்கும் டயர் தொழிற்சாலை தொழில்பட ஆரம்பித்ததும் 650 பேருக்கு வேலைகிடைக்கும்

இத்தொழிற்சாலை நிறுவுவது பற்றி சோவியத் அதிகாரிகளுடன் உள்நாட்டுக் கலாசார, கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநயக்கா இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார்.

இத்தொழிற்சாலை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்கு சோவியத் கோஷ்டி இவ்வாரம் களனிக்கு விஜயம் செய்யும்.

இலங்கை ரஷ்ய பொருளாதார தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இத் தொழிற்சாலை ஒரு வருடத்தில் ஆறு லட்சம் மோட்டார் கார் டயரும் டியூப்பும் உற்பத்தி செய்யும்.

## கல்லோயா கரும்புத் தோட்டத்தில் இலங்கை இராணுவம்

அக்கரைப்பற்று, செவ்வாய்

கல்லோயா அபிவிருத்திச் சபையின் கரும்புத் தோட்டத்தில் கரும்பு அறுவடை வேலையில் முழு மூச்சாக இலங்கை இராணுவம் ஈடுபட்டு வருகிறது. கரும்பு அறுவடை வேலைகள் பூராவும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேலைகள் நடைபெறவிருக்கிறது.

4,000 ஏக்கரில் விளைவிக்கப்பட்ட கரும்புகளில் 1,600 ஏக்கர் முதல் 1,800 ஏக்கர்வரை விளைந்துள்ள கரும்புகளைத் தான் தற்போது இலங்கை இராணுவத்தினர் அறுவடை செய்யவிருக்கிறார்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் மேலும் கரும்புச்சாகுபடிக்காக 1,500 ஏக்கர் மானாவாரி வயல் நிலம் உபயோகிக்கப்படவிருக்கிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

இன்று 31-5-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 4-15 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கே. வேலுப்பிள்ளை - பேச்சு, 7-45 எங்கள் விருப்பம்' 8-00 பகவதி ரங்கராஜன் கமலா ஹரிகரஐயர் - பாட்டு, 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 கானமஞ்சரி.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எஸ். நரஸம்மா - வீணை.

பகல் 12-00 தொழிலாளருக்கு, 1-00 பெண்ணுலகம், 2-10 காரைக்குடி எம். மணி ராஜன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 'நாமகரணம்' - நாடகம், 8-00 எஸ். நரஸம்மா - வீணை. 8-30 ஹாலந்துக்குப் பிரயாணம் - சித்திரம், 9-15 நல்லுரை, 9-20 ரேடியோ நாடக இசை, 9-30 டில்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

# சட்டவிரோத குடியேற்றக்காரர் வீட்டில் வைத்திருந்தவருக்கு 18 மாதச் சிறை

கொழும்பு, செவ்வாய்

"இம்மாதிரியான குற்றங்கள் எளிதில் கண்டுபிடிக்கப்படுவதில்லை. ஆனல் இக்குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், போதுமான அளவு தண்டனை இவர்களுக்குவிதிக்கப்படவேண்டும்" என்று கொழும்பு மேலதிக நீதவான் திரு. நீல்திசநாயக்கா ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாகக் குடியேறியதாகக் கருதப்படும் 8 தென்னிந்தியர்களை வைத்திருந்ததாக அல்லது அவர்களை ஒழித்து வைத்திருந்ததாக வெல்லம்பிட்டி பொலிஸ் பகுதியில் உள்ள வெலிவிற்ற என்ற இடத்தைச்சேர்ந்த அப்துல் சமுத் கமுறன் சாமுவல் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 18 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தபோதே நீதவான் நீல் திசநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவிசாவளை எட்டாவது மைல் கல்லடியில் உள்ள ஒரு வீட்டில், இனம் தெரியாதவர்கள் சிலர் புகுந்திருப்பதாக தகவல் கிடைத்ததும், வெலிவிற்ற கிராம விதானை டபிள்யு. டி. கிறிஸ்தோபர் சில கிராம மக்களுடன் அக்குறிக்கப்பட்ட வீட்டுக்குச் சென்றதாகவும் அவ்வீடு பூட்டியிருப்பதைக் கண்ட கிராம விதானை, கதவைத் தட்டியதாகவும் அச் சமயம், சமுத் கதவைத்திறந்து கொண்டு வெளியில் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. வீட்டினுள் பிரவேசித்த விதானையார், ஒரு அறையில் 8 பேர் நித்திரை செய்துகொண்டிருந்ததைக் கண்டு, அவர்களை எழுப்பி, வந்தகாரணத்தைக் கேட்டதாகவும் சிங்களம் தெரியாத காரணத்தினல் அவர்கள் பதில் கொடுக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாக இவர்கள் இருக்கவேண்டும் என்று சந்தேகித்த கிராம விதானை அவர்களையும் சமுத்தையும்பொலிஸ் பாதுகாப்பில் வைத்தார். எட்டு தென் இந்தியர்களும் பின்னர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதற்கு முன்னரும் பல தடவைகளில் சமுத் வீட்டிலிருந்து பலர் கார் மூலம் வெளியே அனுப்பப்பட்டுவந்தனர் என்றும் கூறப்பட்டது.

## நுகேகொடை தமிழ்ப்பிள்ளைகள்

### வேறு பாடசாலைக்கு அனுப்பக் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

நுகேகொடைசென் ஜோசப் கன்வன்டில் கல்வி கற்கும் தமிழ்ப்பிள்ளைகளை சமீபத்திலுள்ள வேறுபாடசாலைகளுக்கு அனுப்பும்படி தமிழ்ப்பிள்ளைகளின் பெற்றோரை கல்வி இலாகா கேட்டுள்ளது.

இப்பாடசாலையில்மிகக்குறைவான தமிழ்ப்பிள்ளைகளே கல்விகற்று வருவதாகவும் இதனல்தான் பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்வதென்று கல்வி இலாகா தீர்மானித்ததாகவும் இப்பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கமிட்டி அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் கல்வி கற்றுவந்த சில தமிழ்ப்பிள்ளைகளின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களமொழிமூலம் கல்வி கற்பிக்க அனுமதி தருமாறு கல்வி இலாகாவை கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## 670 குடும்பங்களுக்கு குடியிருக்க நிலம்

அக்கரைப்பற்று, செவ்வாய்

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த திருக்கோயில் பகுதியில் வீடுவாசல் இல்லாத விவசாயக் குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் கிராம விஸ்தரிப்புத் திட்டமொன்று அமுல் செய்யப்படவிருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் 670 குடும்பங்களுக்கு குடியிருக்க நிலம்வழங்கப்படும்.

திருக்கோயிலுக்கு அண்மையிலுள்ள கோரக்குறுப் என்னும் தோட்டத்தில் 335 ஏக்கரைக் கொள்முதல் செய்து கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒருவருக்கு அரை ஏக்கர் வீதம் பகிர்ந்து கொடுக்கப்படவிருக்கிறது. தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் கிராம அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைவான வீடு ஒன்றை அமைப்பதக்கு 800 ரூபாய் உதவியும் அரசாங்கம் அளிக்கவிருக்கிறது. மலசலகூடம், கிணறு வசதிகளுக்காகவும் நிதி உதவி அளிக்கப்படுமாம்.

இதுபோன்ற இன்னும் ஒரு கிராம விஸ்தரிப்புத் திட்டம் அக்கரைப்பற்றிலும் அமுல் செய்வதற்கான ஏற்பாடுகளை அக்கரைப்பற்று பிரிவுக்காரியாதிகாரி திரு. பி. எல். பற்றி அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

## கிராம சேவகர் பரீட்சை ஜூலை 22ல் நடைபெறும்

கொழும்பு, செவ்வாய்

'கிராம சேவகர்' பரீட்சை ஜூலை மாதம் 22ந்திகதி நடைபெவிருக்கிறது.

3,178 கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெறவிருக்கும் பரீட்சைகள் கச்சேரிகளில் நடைபெறும்.

இப்பொழுதுள்ள கிராமத் தலைமைக்காரர்களுக்குப் பதிலாக கிராம சேவகர்கள் நியமிக்கப்படுவார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் 570 கிராம சேவ்கர்கள் நியமிக்கப்படுவார்கள். இதர இடங்களில் நியமிக்கப்படவிருக்கும் கிராம சேவகர்கள் விபரம் பின் வருமாறு:—

களுத்துறை-220, கண்டி-353, மாத்தளை-139, அம்பாந்தோட்டை–133, அம்பாரை-21, மொனராகலை - 68, மாத்தறை - 185, பதுளை-117, அநுராதபுரம்-121 பொலநறுவை-26, இரத்தினபுரி-146, கேகாலை–157, வவனியா-4, நுவரெலியா-92, காலி-245, புத்தளம்-139, திருக்கோணமலை-7, குருநாகல்–445.

## காட்டு விநாயகர் பொங்கல்

முள்ளியவளை, செவ்வாய்

இங்குள்ள பழைமை மிக்க காட்டு விநாயகர் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் பொங்கல் விழா, இம்முறையும் வழமைபோல நடைபெற்றது. இம்முறை நடைபெற்ற இவ் விழாவில், கடந்த ஆண்டுகளை விடக் குறைவான மக்களே கலந்து கொண்டனர்.

## அழுகிய விதை வெங்காயம்

யக்கலை, திங்கள்

தெற்கு அளுத்குறுகோரளை உணவு உற்பத்தி அதிகாரிக்கு 1500 ரூபாய் பெறுமதியான ஒரு லொறி நிரம்பிய விதை வெங்காயம் அனுப்பப்பட்டிருந்தது. இந்த வெங்காயத்தை ருத்தல் 28 சதமாக விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக ராகமைக்குக் கொண்டு செல்லப்பட்டது. விவசாயிகளுக்கு விதை வெங்காயத்தை விற்றபொழுதுதான் அவையாவும் அழுகிய நிலையில்இருக்கக் காணப்பட்டது. விவசாயிகள் வெங்காயத்தை வாங்க மறுத்துவிட்டனர். வெங்காயம் முழுவதும் உணவு இலாகாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

## ஜெனிவா மகாநாடு

### தொழில் மந்திரி செல்வார்

கொழும்பு, செய்வாய்

ஜூன் மாதம் 7ந்திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச தொழில் ஸ்தாபன மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் இலங்கைத் தூதுகோஷ்டிக்குப் பதில் தொழில் மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிரிவர்த்தன தலைமை தாங்குவார்.

உதவித் தொழில் கமிஷனர் திரு. டி. ஆர். உமகிலியா இ. தொ. கா. நிர்வாகக் காரியதரிசி திரு. எம். பி. சுந்தரம் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. கிரீவ்ஸ் ஆகியோரும் இத் தூதுகோஷ்டியில் அங்கம் வகிக்கின்றனர்.


**யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!**

**உங்கள் காப்பியின் தரம் குணம், மணம் எந்நாளும் ஒரேவிதமாக அமைகிறதா?**

**இதோ நாங்கள் பெரும் பணச்செலவில் தருவித்துள்ள நவீன**

**எலக்ரிக் ரேஸ்டர்**

மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும் உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம் நிறைந்த காப்பித்தூளைத் தருகிறோம்.

**ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!**

**குறைந்த செலவில் குறித்த நேரத்தில் காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது!**

**Mohamedally Abdullaly**

**முகம்மது அலி அப்துல் அலி**

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.

போன்: 515

# கென்னடி, குருஷ்சேவ் வீயன்ன புறப்பட்டனர்

நியூயார்க், மே 30

ஜனதிபதி கென்னடி சோவியத் பிரதமர் குருஷ்சேவை வீயன்னவில் சந்திக்கும்பொருட்டு இன்றிரவு நியயார்க்கிலிருந்து புறப்பட்டார். அவர் முதலில் பாரிஸ் சென்று பின்பு அங்கிருந்து வீயன்ன செல்வார். திரு. குருஷ்சேவும் கீவிலிருந்து புறப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. அவர் வீயன்ன செல்லும் வழியில் செக்கோஸ்லோவேகியாவுக்குப் போகலாம் என்றும், அங்கு உயர்தர தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வீயன்னவிலிருந்து 10 மைல் தூரத்தில் 4 கட்டிடங்களில் உலகப் பத்திரிகை நிருபர்கள், இச் சந்திப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

---

பெஷாவாரில் செஞ்சட்டைப் படையைச் சேர்ந்த 12 தலைவர்களைப் பாகிஸ்தான் அரசாங்கம் கைதுசெய்தது. இதன் தலைவர் கான் அப்துல் கபார் கான் ஏற்கனவே காவலில் இருந்துவருகிறார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) நவா (கும்பனித்தெரு)

விஜிதா (மஸ்கேலியா)

உதயகுமார், எஸ். வரலக்ஷ்மி, கண்ணம்பா, சூரியகலா நடித்த

ஜெய பவானி

டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

7-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த

மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்

சிவாஜி கணேசன் - பத்மினி நடித்த

உத்தம புத்திரன்

மனோஹரா (யாழ்ப்பாணம்) 2 மணிக்கு 5-45க்கும்

பாலாஜி, தங்கவேலு, பண்டரிபாய் நடித்த

மனமுள்ள மறுதாரம்

மாலை 2 மணிக்கும் 3-45 க்கும் இரு காட்சிகள்

ஏழு திருடர்கள் (ஆங்கிலம்)

SEVEN THIEVES
(ENGLISH)


# வங்காள மொழியை அஸ்ஸாமின் ஆட்சிமொழியாக ஏற்க இயலாது

## அஸ்ஸாம் பிரதேசக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அறிவிப்பு

ஷில்லாங், மே 30

மொழித் தகராறு பற்றி வாதிப்பதற்காக வங்காள மொழி வழங்கும் கச்சார் பகுதியைச் சேர்ந்த அசாம் சட்டசபை பாராளுமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களை அஸ்ஸாம் முதல் அமைச்சர் திரு. பி. பி. சாலிகா அழைத்திருக்கிறார்.

கூடிய விரைவில் ஷில்லாங் நகரில் இப்பேச்சு நடக்கலாம். வங்காள மொழியையும் அஸ்ஸாமின் கூட்டு ஆட்சி மொழியாக அங்கீகரிக்கவேண்டுமென வற்புறுத்தி கச்சார் பகுதியில் சங்ரம் பரீஷத் இயக்கத்தினர் கிளர்ச்சி நடத்திவருகின்றனர். இதற்கு அப்பகுதியிலுள்ள காங்கிரஸ் கட்சியினரும் ஆதரவு அளித்து வருகின்றனர். கடந்த ஒருவாரகாலமாக அரசாங்க அலுவலகங்கள் முன்பாக மறியல் செய்தும் வருகின்றனர். கச்சார் பகுதி நிலைமை குறித்து அஸ்ஸாம் மாகாண காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. சித்திநாத் சர்மா, நிதி அமைச்சர் திரு. பக்ருதீன் அலி ஆகிய இருவரும் இன்று முதல் அமைச்சரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். இதன் விளைவாக மொழித் தகராறு பற்றி விவாதிக்கலாமென அப்பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டசபை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு திரு. சாலிகா அழைப்பு அனுப்பியிருக்கிறார்.

"வங்காள மொழியை அஸ்ஸாமின் கூட்டு ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள அஸ்ஸாம் காங்கிரஸ் கட்சி சம்மதிக்காது. ஆனால் இது தவிர மொழித் தகராறைத் தீர்ப்பதற்குக் கூறப்படும் எந்த ஆலோசனையையும் விவாதிப்பதற்கு தயாராக இருக்கிறோம். அவர்களே இதற்கு ஆலோசனை கூறவேண்டும்" என்று பிரதேச காங்கிரஸ் தலைவரான திரு. சர்மா கூறினர்.

## "அதிக உணவு பயிரிடுக"

### இயக்கம் தீவிரமடைகிறது

கொழும்பு, செவ்வாய்

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையில் வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்க இலங்கை பூராவும் 'அதிகஉணவுபயிரிடுக' இயக்கம் தீவிரமாக இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த இயக்கம் இயங்க காரணமாயிருக்கும் இலங்கை வர்த்தக சபை, வர்த்தக ஊழியர்களின் வீடுகளில் இதன் நோக்கத்தைப் பரப்பி வருகிறது. இந்த ஊழியரின் தொகை மட்டும் 50,000 ஆகும்.

இலங்கைவர்த்தக சபையின் காரியதரிசி திரு. கொங்ராட் டயஸ் இந்த இயக்கம் வளர்ச்சியுறவேண்டுமென்பதே தமது நோக்கமென்றும் கூறினர்.

இலங்கையிலுள்ள ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் தக்க இடமிருந்தால் எலுமிச்சை மரம், சில பப்பா மரங்கள், ஒரு முருங்கை மரம் இவற்றுடன் மரக்கறி வகைகள் சிலவும் பயிரிடப்பட வேண்டும்' என அவர் மேலும் கூறினர்.

திரு. டயஸ் மேலும் கூறியதாவது:

வர்த்தக சபை இதுவரை 7,000 பாக்கட் பப்பா விதைகள் இலவசமாக விநியோகம் செய்துள்ளது. எலுமிச்சை விதைகளுக்கும் வேறு மரக்கறி விதைகளுக்கும் பலர் கேட்டுள்ளனர். சபை பிரதம மந்திரியுடனும் நீதி மந்திரியுடனும் இந்த இயக்கம் பற்றி பேச்சுவார்த்தைகள் நடாத்தியுள்ளது. இவ்வியக்கத்துக்கு அவர்கள் ஆதரவு அளிப்பதென உறுதியும் அளித்துள்ளனர். கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை, மீன் வளர்ப்பு ஆகிய வற்றிலும் சபை தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

---

## பாடசாலை குழந்தைகளுக்கு இலவச பல் சிகிச்சை

புதுடில்லி, மே 30

இந்தியாவில் பாடசாலைக் குழந்தைகளுக்கு இலவச பல் சிகிச்சை அளிக்கும் பொருட்டு 500 பல் சிகிச்சை நிலையங்களை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஏற்கனவே 12 வைத்தியக் கல்லூரிகள் இந்தியாவில் இயங்கிவருகின்றன என்றும், மேலும் சில வைத்தியக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே மின்சாரப் பரிமாற்றம்

லண்டன், மே 30

பிரிட்டனும், பிரான்சும் மின்சாரத்தைப் பரிமாறிக்கொள்ளும் புதிய திட்டம் நாளை முதல் செயல்படும்.

இதற்காக "இங்கிலீஷ் கால்வாயில்" கடலுக்கடியில் கம்பிகள் போடப்பட்டுள்ளன.

இரு நாடுகளிலும் மின்சாரத் தேவை குறைவாக இருக்கும் நேரங்களில் மின்சாரம் பரிமாறிக்கொள்ளப்படும்.

பிரிட்டனிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தால் பிரான்சில் ரயில்களை ஓட்ட முடியும். பிரான்சிடமிருந்து கிடைக்கும் மின்சாரத்தால் பிரிட்டனில் உணவைத் தயாரிக்க முடியும்.

---

சென்னை, மே. 30

திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து விலகி, தமிழ் தேசியக் கட்சியில் சேர்ந்துவிட்டதாக வெளியான செய்தியை திரு. அ. அன்புரோஸ் மறுத்திருக்கின்றார்.

தி. மு. க. விலிருந்து தாம் விலகவில்லை என்றும், எந்தக் கட்சியிலும் சேருவதற்கு எவ்வித நிர்ப்பந்தமும் தமக்குக் கிடையாதென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## பதவியிலிருந்து விலகும்

(1-ம் பக்கத் தொடர்)

திரு. தயாள் ஏற்கனவே சமர்ப்பித்த காங்கோ பற்றிய அறிக்கைதான் இப்போது அங்கு அமுல்நடத்தப்பட்டுவருவதாய்க் கூறப்படுகிறது. தயாள் லண்டன் வழியாக இப்போது புதுடில்லி திரும்பிக்கொண்டிருக்கிறார்.

## ராஜ்யங்களுக்கு முன்மாதிரியாகத் தமிழகம் விளங்குகிறது

### கேரளச் சட்டசபை உறுப்பினர் பாராட்டு

நாகர்கோவில், மே 30

மானமுள்ள தொழில் புரிய மாதர்கள் தயங்கலாகாது என்று கேரள சட்டசபை உறுப்பினர் திருமதி நபீசத்பீவி இங்கு கூறினர்.

அகத்தீசுவரம் சமுதாயநலத் திட்டத்தின் இறுதி நாள் விழா திரு. இராமசுவாமி தலைமையில் கொட்டாரத்தில் நடைபெற்றது. திரு. பாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் உரையாற்றிய திரு. நபீசத்பீவி மேலும் கூறியதாவது:- பொருளாதார சுதந்திரம் இல்லாவிடில் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. எனவேதான் பொருளாதார சுதந்திரத்திற்காகப் பல திட்டங்கள் தீட்டியுள்ளோம். திட்டங்கள் வெற்றியடைய அதிகாரிகளுடன் மக்களும் ஒத்துழைக்கவேண்டும்.

கேரளத்தில் ஊராட்சி மன்றச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. ஆனல் தமிழ் நாட்டில் அச்சட்டம் முன்னதாகவே செயலுக்கு வந்துவிட்டது. பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் தமிழகம் விளங்குகிறது நாட்டிற்கு உழைக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் தமிழர்களிடத்தில் நிறைந்துள்ளதே அதற்குக் காரணம்.

---

## கவி தாகூர் விழா கொண்டாட்டங்கள்

### அமெரிக்காவில் நீடித்து நடைபெறுகின்றன

நியூயோர்க் மே 30

நியூயோர்க் நகரில் ரவீந்திரநாத் தாகூர் விழா நிகழ்ச்சிகள் ஏராளமாக நடைபெறுகின்றன. கலைப்பொருள் கடைகளும் விழாவில் கலந்துகொள்ளத் தொடங்கிவிட்டன.

---

## கொலை முயற்சி பற்றி சஞ்சீவ ரெட்டி

துர்க்காபூர், மே 30

திரு. சஞ்சீவ ரெட்டியைக் கொல்ல முயற்சித்தது குறித்து இன்று அவர் நிருபர்களுடன் பேசுகையில் "சமூகத்தில் பைத்தியக்காரர்கள் இருக்கத்தான் இருப்பார்கள்" என்று அபிப்பிராயம் தெரிவித்தார்.

# செய்திச் சுருக்கம்

ஐக்கிய அராபியக் குடியரசு தென்னபிரிக்காவுடன் ராஜீய உறவை முறித்துக்கொண்டதாய் அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

காங்கோவிலுள்ள ஸ்டான்லிவில்லிக்கருகில் 40 கிராமவாசிகளை லுமும்பா ஆதரவாளர்கள் கொலை செய்ததாய் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் அரசாங்கம் சொந்தமாக பத்திரிகைகளையும், செய்தி ஸ்தாபனங்களையும் நடத்துவதற்கான சட்டம் சீக்கிரம் கொண்டு வரப்படும் எனத் தெரிகிறது

∴ ∴ ∴

தண்டகாருண்யத்தில் 6 கோடி ரூபாய் செலவில் 4 அணைக்கட்டுகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.